# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 05.09.2023 supeedsam.com supeedsam@gmail.com


# திருமலையில் பேரினவாதம் சண்டித்தனம் காட்ட இடமளியோம்!



தமிழர் தலைநகரான திருகோணமலையில் கண்ட கண்ட இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவவும் – மேலும் சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்களை அமைக்கவும் பேரினவாதம் முயற்சிக்கின்றது. அவர்களின் இந்தச் சண்டித்தனத்துக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர் பகுதிகளில் விகாரைகள்; சம்பந்தன் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்



திருகோணமலை, இலுப்பைக் குளத்தில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதன் காரணமாக அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மை, பிராந்தியத்தில் திட்டமிடப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று எச்சரித்து, ஜனாதிபதிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கடிதம் எழுதியுள்ளார்.

99 வீதமான தமிழர்கள் வாழும் இந்தப்பிரதேசத்தில் விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளமை அந்த பகுதி

02 ஆம் பக்கத்தில்...

## தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை உச்சரிக்க சிங்கள இனவாதிகளுக்கு அருகதை கிடையாது



'தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை உச்சரிப்பதற்குக் கூட சரத் வீரசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற

02 ஆம் பக்கத்தில்...

## ஜனாதிபதி தேர்தலில் ரணிலை அநுர தோற்கடிப்பார்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மட்டுமே எதிர்கால தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்கக்கூடிய ஒரே பொது வேட்பாளர் என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

பொது வேட்பாளரைத் தேட

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவங்களோடு ராஜபக்ச அதிகாரிகளுக்கு தொடர்பு

### தாக்குதல்கள் பற்றிய ஆவணப்படத்தை சேனல் 4 வெளியிடுகின்றது

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் பின்னனியில் அரச புலனாய்வு சேவையின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே இருந்ததாக லண்டன் டைம்ஸ் அறிக்கை கூறுகிறது.

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக்கு ராஜபக்ஷ குடும்பத்திற்கு விசுவாசமாக இருந்த இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சாலி மற்றும் ஐ.எஸ். அமைப்பு இடையே ஒரு சந்திப்பு 2018 இல் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...




## காணாமல் போன ஆட்கள் அலுவலகத்திற்கு 14988 முறைப்பாடுகள் இதில் 15 பேர் கண்டுபிடிப்பு

(கனகராசா சரவணன்)

இலங்கையிலுள்ள காணாமல்போன ஆட்கள் பற்றிய பற்றிய அலுவலகத்திற்கு இதுவரை 14988 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது இதில் 4018 முறைப்பாடுகளை பூர்வாங்கள் விசாரணை செய்துள்ளதுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 15 பேரை நேரடியாக சந்தித்து கண்டு பிடித்துள்ளதுள்ளோம் எனவே இந்த கண்ணீருடன் வாழுகின்ற மக்களுடைய கண்ணீருக்கும் அவர்களுடைய துன்ப துயரங்கள் கவலைகள் வலிகளுக்கும் நிச்சயமாக எமது அலுவலகம் சார்பிலே எம்மால் முடிந்தவரையில் தீர்க்கமான

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் ஜனாதிபதியாக ஆசை



அரசியலில் நான் எதற்கும் தயாராகவே இருக்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


02 ஆம் பக்கத்தில்...















கிழக்கிலங்கையின் முதல் தேரோடும் ஆலயம் என்ற பெருமையினையும் இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயத்தின் தேரோட்டம்...

# மட்டு பிராந்திய சுகாதார சேவை பிரிவிலுள்ள 23 வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கு வழங்கி வந்த இலவச உணவு இடைநிறுத்தம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள ஆதார வைத்தியசாலை, மாவட்ட, மற்றும் கிராமிய வைத்திய சாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட உணவு கடந்த முதலாம் திகதியுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் பெருதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றினைந்த சுகாதார ஊழியர் சங்க மட்டு மாவட்ட இணைப்பாளர் மாணிக்கராஜா லோகராஜ்குமார் தெரிவித்தார்.

இந்த இலவச உணவு இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக ஒன்றினைந்த சுகாதார ஊழியர் சங்க மட்டு மாவட்ட தலைவர் மாணிக்கராஜா லோகராஜ்குமார் திங்கட்கிழமை (04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் உணவு வழங்கும் நிறுவனங்கள் ஊடாக 3 நேர சமைத்த இலவச உணவு வழங்கப்பட்டு வந்தது

இந்த நிலையில் இவ்வாண்டு குறித்த சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது தற்போது முடிவடைந்துள்ளதால் அதற்கான நிதி இல்லாமையினாலும் நிதி ஒதுக்கப்படாத காரணத்தால் ஒப்பந்தம் செய்து கொண்ட உணவு வழங்கும் சேவையை தற்காலிகமாக இடைநிறுத்தி ஒப்பந்த காரர்களுக்கு பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் கடித மூலம் அறிவித்ததையடுத்து இலவச உணவு வழங்கள் கடந்த முதலாம் திகதியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது

இதனால் மாகாண பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள மட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வாழைச்சேனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைகள் , மாவட்ட, கிராமிய வைத்திய சாலைகளான சுமார் 52 வைத்திய சாலைகளுக்கான இலவச உணவு நிறுத்தப்பட்டுள்ளதால் கஸ்ட பிரதேசங்களான தூர இடங்களில் இருந்து வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் அந்தந்த வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தூர இடங்களில் இருந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் தமக்கான உணவை பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர் அதே வேளை வைத்தியசாலையகளில் கடமையாற்றும் பணியாளர்கள் மாதம் 55 ஆயிரம் ரூபா வரையிலான தமது சம்பள கொடுப்பனவில் வாழ்ந்துவரும் இவர்களுக்கு இலவச உணவு திட்டம் பெரும் உதவியாக இருந்தது இந்த உணவு நிறுத்தப்பட்டதால் அவர்களும் பெரும்பாதிபடைந்துள்ளனர்.

எனவே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இலவசமாக உணவு வழங்களை மீண்டும் உடனடியாக வழங்க இரசு முன்வரவேண்டும் என அராங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக மட்டு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் வை;தியர் சுகுணனை தொடர்பு கொண்ட போது அவர் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைய ஊடகங்களுக்கு தெரிவிக்கும் அதிகாரம் இல்லை எனவும் 22 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச உணவு வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதை அவர் உறுதிப்படுத்தினார்.

## காணாமல் போன ஆட்கள் அலுவலகத்திற்கு 14988 முறைப்பாடுகள்...

தீர்மானங்களை எடுப்போம் என காணாமல் போனே ஆட்கள் பற்றிய அலுவலக ஆணையாளர்களில் ஒருவரான யோகராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உல்லாச விடுதி ஒன்றில் காணாமல் போன ஆட்கள் அலுவலக தலைவர் சட்டத்தரணி மகேஸ் கத்துரங்க ,ஆணையாளர்களில் ஒருவரான யோகராஜா ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை (3) நடாத்திய ஊடக மாநாட்டில் ஆணையாளர் யோகராஜா இவ்வாறு தெரிவித்தார். .

இந்த அலுவலகம் 2018ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அலுவலகத்திற்கு இதுவரையில் 14 ஆயிரத்து 988 முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது இதனை காலத்தின் அடிப்படையில் 3 பிரிவுகளாக பிரித்தோம் அதில் 2000 ஆண்டில் இருந்து 2020 வரையிலும் முதலாம் தரத்திலும் 1990 ம் ஆண்டில் இருந்து 2000 ஆயிரம் ஆண்டு வரையும் இரண்டாம் தரத்திலும் 1990 ம் ஆண்டுக்கு பிற்பட்டதை 3 ம் பிரிவாகவும் பிரித்துள்ளோம்.

இதனடிப்படையில் முதலாவது தரத்திலுள்ள விசாரணைகள் ஆரம்பித்துள்னோம் இதில் 6 ஆயிரத்து 25 முறைப்பாடுகள் கிடைத்துள்ளது இந்த முறைப்பாட்டில் இன்று வரைக்கும் 4 ஆயிரத்து 18 முறைப்பாடுகளை பூர்வாங்கள் விசாரணை செய்துள்ளோம்.

இருந்தபோது எமது விசாரணையின் போது முல்லைத்தீவு. மட்டக்களப்பு நகர் போன்ற பல இடங்களில் பல்வேறுபட்ட எதிர்ப்புக்களை சந்தித்துள்ளோம் எனவே எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் செய்வது அவர்களது உரிமை அதனை அவர்கள் செய்வதற்கு நாங்கள் என்றுமே தடையில்லை ஆனால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட அந்த கடமைகளை சரிவர செய்து கொண்டிருக்கின்றோம்.

முதலாவது பிரிவில் 6025 முறைப்பாட்டில் இன்றுவரை 4018 முறைப்பாடுகளை விசாரணை செய்து முடித்துள்ளோம் அதில் 80 வீதமான முறைப்பாட்டாளர்கள் வருகை தந்து எங்கள் விசாரணைக்கு உறுதுணையாக இருந்து அறிக்கைகளை பெற்றனர்.

இருந்தபோதும் தற்போது எமது அலுவலகத்தில் பூர்வாங்கள் விசாரணை முடிந்த 3 வகையான தொடர்நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் அதில் முதலாவதாக இடைக்கால கொடுப்பனவாக இரண்டு இலச்சம் ரூபா இதுவரைக்கும் 300 பேருக்கு மேற்பட்வர்களுக்கு ஒரு கொடுப்பனவு வழங்கிருக்கின்றோம் அத்துடன் மரணச் சான்றிதழ் மற்றும் காணப்படாத சான்றிதழ் போன்றவற்றிக்கு சிபார்சுக்களை செய்து இதுவரைக்கும் இவற்றை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்படி வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 15 பேரை நேரடியாக சந்தித்து கண்டு பிடித்து அவர்களுடைய விபரங்களை பெற்று அந்த விபரங்களின் படி அறிக்கையிட்டு 15 பேரின் முறைப்பாட்டு கோவைகளை முடிவுறுத்தியுள்ளோம் இடைக்கால நிவாரணம் என்பது காணாமல் போனவர்களுக்கான நஷ்;டஈடு அல்ல இது காணாமல் போனவர்களில் தங்கியிருக்கும் குடும்ப உறவினருக்கு ஒரு இடைக்கால நிவாரணம். இது அரசால் அறிவிக்கப்பட்ட 2 இலச்சம் ரூபா கொடுப்பனவுக்கு நாங்கள் சிபர்சு செய்து கொண்டிருக்கின்றோம் அதேவேளை மரணசான்றிதழ்கள் மிகவும் குறைவானவர்கள்தான் கேட்கின்றனர்.

அதேவேளை முறைபாட்டிற்கு விண்ணப்பித்து விசாரணைக்கு வரும் 90 சதவீதத்தினர் காணப்படாததற்கான சான்றிதழ்களை கேட்டு வாங்கி கொண்டிருக்கின்றனர்.

இந்த இடைக்கால நிவாரணமாக 2 இலச்சம் ரூபா பெற்றுக் கொடுப்பதற்கு மேலதிகமாக குடும்பங்களுக்கான வாழ்வாத உதவிகளை 3 நிறுவனங்கள் அதாவது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இரண்டாவது ஓ.ஆர் எனப்படும் இழப்பீடுகளுக்கான அலுவலகம். மூன்றாவது சமாதாதனத்துக்கான அலுவலகம் ஆகிய 3ம் இணைந்து செயற்படுகின்றது.

இந்தவகையில் இடைக்கால கொடுப்பனவு பற்றி ஓ.ஆர் எனப்படும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் செயற்படுவதுடன் எங்கள் அலுவலகத்தின் சிபார்சில் இடம்பெறுவதுடன் சமாதாதனத்துக்கான அலுவலகம் ஊடாக சிறுசிறு உதவிகள் வழங்குவற்கான ஏற்பாடுகள் இருக்கின்றதுடன் அதற்கு மேலதிகமாக காணாமல்போன ஒருவருக்கு 10 இலச்சம் ரூபாவை வழங்க வேண்டும் என ஜனாதிபதி கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகத்தில் ஒரு தலைவர் 6 ஆணையாளர்களும் சபை உறுப்பினர்கள் இருக்கின்றனர் பூர்வாங்கள் விசாரணை செய்யும் போது அணைத்து ஆணையாளர்களுக்கும் அனைத்து சபை உறுப்பினர்களுக்கும் உள்ள உணர்வுகள் நாங்கள் தற்போது கருதுவது யுத்தம் புரிந்த புலிகளையே வேறு இயக்கங்களாக இருந்தாலும் சரி அல்லது முப்படைகளின் பொறுப்பாளர்களாக இருந்தாலும் சரி அந்த இரு பகுதியினரதும் பெற்றோர் அல்லது கணவன் மனைவியே குழந்தைகளே சகோதரர்களே இருக்கின்ற உறவுகள் ஒரே மாதிரியானவை என்பதை நாங்கள் தீர்க்கமாக தீர்மானித்துக் கொண்டுதான் இந்த பூர்வாங்கள் விசாரணைகளை நடாத்தி வருகின்றோம் என்றார்.

## மீண்டும் ஜனாதிபதியாக ஆசை

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்கவும் தயார் எனவும் தெரிவித்தார்.

மேலும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் நாம் அனைவரும் சகோதரர்கள்போல் செயற்பட்டு வருகின்றோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நிச்சயம் ஏற்பேன்ி என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்

## ஜனாதிபதி தேர்தலில் ரணிலை அநுர தோற்கடிப்பார்

வேண்டிய அவசியமில்லை. ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்க பொது வேட்பாளர் ஒருவர் தேவை என எவரேனும் கூறினால், அவர் ஏற்கனவே எங்களுடன் இணைந்துவிட்டார் என்பதே அர்த்தகம்.

ரணில் விக்ரமசிங்கவை மட்டுமல்ல, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போன்றவர்களால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு அமைப்பையும் தோற்கடிக்கக்கூடிய ஒரே தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மாத்திரமே. ஆகவே, பொது வேட்பாளரை தேட வேண்டிய அவசியம் இல்லை.

2024ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்க முடியும்.

நாட்டில் ஆட்சிமாற்றத்துக்கான சாதகங்கள் அதிகமாக உள்ளதாக பல கருத்துக்கணிப்புகள் கூறுவதுடன், அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து சக்திகளும் கைகோர்க்க வேண்டிய ஒரே இடமாக தேசிய மக்கள் சக்தியே உள்ளது என்றார்.

இதேவேளை, ஜே.வி.பியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி, அயர்லாந்தில் எனக்கு வீடு இருப்பதாக நாழிதெளொன்று செய்தி வெளியிட்டது. இதுதொடர்பாக இதற்கு எதிராக பத்திரிகை ஸ்தாபனத்தில் முறைப்பாடு பதிவுசெய்த போது வெளியிடப்பட்ட செய்தி பொய்யானது எனத் தெரிவிக்கப்பட்டது.

எங்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளுக்கு அவர்களின் சொந்த ஊடக நிறுவனங்களிலேயே பதிலும் அளிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் கணக்குகளில் 800 கோடி ரூபா இருப்பதாக போலி பிரசாரத்தை முன்னெடுத்தனர். எங்கள்மீது அரசியல் குற்றம் சுமத்த முடியாது என்பதற்காக அவதூறுகளை பரப்புகின்றனர் எனக் கூறியுள்ளார்.

## தமிழர் பகுதிகளில் விகாரைகள்....

மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அது நீடித்தால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் எனவும் சம்பந்தன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும்,அந்த இடத்தில் உள்ள பௌத்த நினைவுச்சின்னங்கள் பராமரிக்கப்படக் கூடாது என்று தாம் கூறவில்லை என கூறியுள்ளார். குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டுடன் கணிசமான அபிவிருத்தியை கருத்தில் கொள்ளும்போது சமூக சூழலை சீர்குலைக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## திருமலையில் பேரினவாதம் சண்டித்தனம் ...

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயகம். எமது தாயகத்தின் தலைநகர் திருகோணமலை. இங்கு தமிழர்களை ஒதுக்க அல்லது இல்லாதொழிக்கச் சிங்கள – பௌத்த அடிப்படைவாதிகள் பெரிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகின்றனர். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

தமிழர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் பௌத்த விகாரைகள் எதற்கு? சட்டவிரோதச் சிங்களக் குடியேற்றங்கள் எதற்கு? இந்த அடாவடிச் செயற்பாடுகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். – என்றார்.

## ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவங்களோடு

இலங்கையை சீர்குலைக்கவும் ராஜபக்சர்களை மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு சதித்திட்டம் தீட்டும் வகையில் இந்த சந்திப்பு இடம்பெறத்தாக பிரித்தானிய ஊடகமான த டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கூட்டம் முடிந்தது, சுரேஷ் சாலி என்னிடம் வந்து ராஜபக்சேக்களுக்கு இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல் தேவை, அதுதான் கோட்டாபய ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி என ஹன்சீர் ஆசாத் மௌலானா கூறுகிறார்.

தாக்குதல் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல, திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குப் பின்னர் 6 மாதங்களில் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்து கோட்டாபய ராஜபக்ச ஆட்சியைப் பிடித்தபோது சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்.

இவர் இதற்கு முன்னர் தனது சகோதரரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்துள்ளார்.

மௌலானா கடந்த ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி ஐரோப்பிய புலனாய்வு அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் தனது சாட்சியத்தை முன்வைத்துள்ளார். இதேவேளை பெயரிடப்படாத மூத்த அரசாங்க அதிகாரி, இரண்டாவது விசில்ப்ளோயர் தாக்குதல் தரிகளுடன் சாலியின் உறவுகள் பற்றிய மௌலானாவின் கருத்தை ஆமோதித்துள்ளார்.

மேலும் குண்டுவெடிப்புகளுக்கு முன்னும் பின்னும் இராணுவ புலனாய்வு, பொலிஸ் விசாரணைகளை மீண்டும் மீண்டும் தடுத்ததாகவும் கூறியுள்ளார்.

2019ல் ஆட்சிக்கு வந்ததும், விசாரணையில் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும் பணியிடமாற்றம் செய்யப்பட்டனர், விசாரணை முற்றிலுமாக நிறுத்தப்பட்டது என்றும் அந்த அதிகாரி கூறுகிறார்.

2021 ஆம் ஆண்டு குண்டுவெடிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இறுதி செய்யப்பட்ட போதும், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அதை வெளியிட மறுத்துவிட்டார்.

மேலும் மௌலானா பல ஆண்டுகளாக ராஜபக்சக்களுக்கு விசுவாசமான அரசியல்வாதியான பிள்ளையானுக்கு உதவியாளராக பணியாற்றினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை....

இனவாதிகளுக்கு எந்த அருகதையும் கிடையாது. எங்களுடைய உரிமைக்காகப் போராடிய எங்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் நியாயமான நிலைப்பாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டுவதற்கு ஒருபோதும் தயங்கப்போவதில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

‘விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் துதிபாடுவோரை அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்’ – என்று சிங்களக் கடும்போக்குவாத நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர,விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியிருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.ிசரத் வீரசேகர, விமல் வீரவன்ச,உதய கம்மன்பில போன்றவர்கள் மிகக் கீழ்த்தனமான சிங்கள – பௌத்த இனவாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள். இங்கு ஏனைய இனத்தவர்கள், மதத்தவர்கள் வாழ்வதற்கு அவர்களுக்கு உடன்பாடில்லை. குறிப்பாகத் தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் குறிக்கோள்.

தங்களைப் போன்ற இனவெறியர்களின் செயற்பாடுகளாலேயே தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள் என்ற உண்மையை இன்று பெரும்பான்மையினத்தவர்களின் தரப்பில் இருந்தே சொல்லப்படுவதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

தமிழ்த் தரப்பில் இருந்து உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளி அல்லது கொலை செய்து கதையை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த மூன்று இனவாதிகளும் இருக்கின்றார்கள் என்பதை அவர்களின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

இவர்களின் அச்சுறுத்தல்களுக்குத் தமிழ்ச் சமூகம் அடிபணியப் போவதில்லை.எங்களுடைய உரிமைக்காகப் போராடிய எங்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் நியாயமான நிலைப்பாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டுவதற்கு ஒருபோதும் தயங்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

# தம்பலகாமத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆணைக்குழு முன்னிலையில் வாக்கு மூலம் அளிப்பு



(ஹஸ்பர்)

வடகிழக்கு யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர்களின் உறவுகளுக்கான விசாரணை தம்பலகாமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் நடைபெற்ற இவ் வாக்கும் மூலம் பதிவில் தம்பலகாமம்,கிண்ணியா,திருகோணமலை பட்டினமும் சூழலும்,மொறவெவ ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளை சேர்ந்த காணாமல் போனவர்களின் உறவினர்கள் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணைக்குழு முன்னிலையில் சுமார் 22 க்கும் மேற்பட்டவர்கள் வாக்கு மூலம் அளித்தனர். இதில் பல காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தங்களது வாக்கு மூலங்களை அளித்ததுடன் ஆணைக்குழுவினர் வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

இதில் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலக ஆணையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# வேலோடுமலை ஆலயத்திற்கு இரண்டு சூரிய ஒளி மின் பல்புகள்!



( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற வேலோடு மலை முருகன் ஆலயத்திற்கு மலையகத்தின் றாகலையைச் சேர்ந்த பவிஷன் குடும்பத்தினர் இரண்டு சூரிய ஒளியில் இயங்கும் மின் பல்புகளை வழங்கியுள்ளனர்.

வேலோடுமலை முருகன் ஆலய ஆதீன கர்த்தா முருக பக்தர் தியாகராஜா அவர்களிடம் இரண்டு பின் பல்ப்புகளும் அதை வழங்கப்பட்டது.

மொனராகலையில் வைத்து றாகலையைச் சேர்ந்த பவிஷன் குடும்பத்தினர் இதனை வழங்கி வைத்தார்கள்.

அச் சமயம் சித்தர்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியிலிருந்து சித்தாண்டி ஊடாக மேற்கு காட்டுப்பகுதியில் அமைந்துள்ள வேலோடு மலை முருகனாலய பகுதியில் மின்சாரம் குழாய் நீர் வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலாவுக்கு கௌரவம்

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி கல்முனை கல்வி வலய கல்முனை கர்மேல் பத்திமா கல்லூரியில் இன்று கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல் நஜீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றினர். மாவட்ட மட்ட போட்டிகளின் தொடக்க நிகழ்வை கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபக ரீதியாக தொடங்கி வைத்தார். இங்கு அதிதிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் ஆங்கில கல்வியின் முன்னேற்றம், எதிர்கால ஆங்கிலத்தின் தேவைகள், ஆங்கில கல்வியின் முன்னேற்றம், கிழக்கு மாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

எதிர்வரும் செப்டம்பர் 30, 2023 அன்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டு அவருக்கு கல்முனை கல்வி மாவட்டம் சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு மரியாதையும் வழங்கப்பட்டதுடன் நினைவுச்சின்னங்களும், பட்டாடைகளும் போத்தி கௌரவிக்கப்பட்டார்.

இங்கு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். எஸ். நஜீம் உட்பட கல்வி பணிப்பாளர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி, உதவி கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னனி மன்னார் மாவட்ட குழுக் கூட்டம்



( வாஸ் கூஞ்ஞ)

அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னனி மன்னார் மாவட்ட குழுக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை (03) காலை 8.30 மணித் தொடக்கம் மாலை 4 மணி வரை மன்னார் ஆகாஷ் ஹொட்டலில் இடம்பெற்றது.

இதில் அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னனியின் ஸ்தாபகரும் களுத்துறை பாராளுமன்ற உறுப்பினருமான இம்தீயாஸ் பாக்கீர் மரைக்கார் , பலஸ்தீன் பிரதி உயர் ஸ்தானிகர் ஹீசாம் அபூ தாஹா , இம்முன்னனியின் தேசியத் தலைவர் லுக்மன் சஹாப்டீன் , இவ் அமைப்பின் மன்னார் மாவட்டத் தலைவர் எச்.எம்.அவ்ராஸ் , கடந்த கால்த் தலைவர் றசீட் எம் இம்தீயாஸ் , ஆலோசகரும் பயிற்றுவிப்பாளருமான எம்.எஸ்.எம்.இர்ஹான் ஷராவி மற்றும் வளவாளராக கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் எம்.மகேஷ் ஆகியோர் உட்பட பல் முக்கியஸ்தர்கள் அதில் கலந்து கொண்டனர்.

இவ் அமர்வில் இளைஞர்களின் தலைமைத்துவ மற்றும் தனியாள் ஆளுமை விருத்தி தொடர்பான கருத்துக்கள் சார்ந்த உரைகள் இடம்பெற்றன.

இக்கூட்ட அமர்வில் 150 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

# பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?

## திருமலையில் எதிர்ப்புப் பேராட்டம்!





(அபு அலா)

திருகோணமலை இலுப்பைக் குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை அமைக்கப்படவுள்ளதை எதிர்த்து ஞாயிற்றுக்கிழமை மனித சங்கிலிப் போராட்டமொன்று திருகோணமலை, சாம்பல் தீவு பாலத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருடன் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது குறித்த விகாரை அமைக்கப்படவுள்ளதை எதிர்க்கும் வகையில், பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?, பெரியகுளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து, தொல்லியல் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமா?, தொல்லியல் திணைக்களமே இனவாதத்தை தூண்டாதே போன்ற வாசகங்களை ஏந்தியவாறும், பலவாறு கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

முன்னதாக அப்பகுதிகளில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் வகையில் திருகோணமலை - நிலாவெளி பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில், திருகோணமலை நீதிவான் நிதிமன்றினால் இப்போராட்டத்தில் கலந்துகொள்வதற்கு 14 பேருக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் இளைஞர் அணித்தலைவர் கிருஷ்ணபிள்ளை பிரசாத், தமிழ்ப் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஸ் நிக்லஸ், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குச்சசெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மற்றைய தரப்பில் பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 7 பேருக்கும் எதிராக இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இன்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலாவெளி பொலிஸாரினால் குறித்த தடையுத்தரவு வாசித்துக் காட்டப்பட்டதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சாம்பல்தீவு பாலத்துக்கு அப்பால் சென்று தமது எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்தார்கள்.

திருகோணமலை, இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்ணளவாக 540 குடும்பங்களைச் சேர்ந்த 2202 தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அத்துடன், இதனை சூழவுள்ள பெரியகுளம், ஆத்திமோட்டை, சாம்பல் தீவு மற்றும் சல்லி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மட்டுமே காலகாலமாக வாழ்ந்து வருகிறார்கள். சிங்கள பௌத்தர்கள் இல்லாத இப்பிரதேசத்தில் பௌத்த விகாரை நிறுவப்படுமானால், அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து இன வன்முறைக்கும் வித்திடும் என அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றனர்.

இதேவேளை, குறித்த இடத்தில் பௌத்த விகாரை அமைக்க கிழக்கு ஆளுநரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் 12ஆம் திகதி பெரியகுளம் சந்திப் பகுதியிலும் 28ஆம் திகதி மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஏ6 வீதியை மறித்தும் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோடு, அன்று கச்சேரியில் இடம்பெற்றுக்கொண்டிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் புகுந்து சில பௌத்த பிக்குகள் குழப்ப நிலையை விளைவித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வேப்பஞ்சாறு சாத்துதலுடன் ஆரம்பமாகும் நற்பிட்டிமுனை பத்ரகாளியம்மன் மகா கும்பாபிஷேகம்




( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை ஆறாம் தேதி புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகிறது.

நாளை மறு நாள் 7ஆம் தேதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் என்னணய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் .

இங்குள்ள விசேஷம் என்னவென்றால் எண்ணெய் காப்பாக அம்மனுக்கு வேப்பஞ்சாறு சாத்துவது வழமையாகும்.

தொடர்ந்து 8ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.19 மணி முதல் 10.41 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம் பெற இருக்கின்றது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 20ஆம் தேதி 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகம் இடம்பெறும் .

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேக கிரியைகளை தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தார்கள்.

# காணாமல் ஆக்கப்பட்ட 158 பேரின் 33 வது ஆண்டு நினைவேந்தல்

(பேரின்பராஜா சபேஷ்)

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்த வேளை இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று காணமல் ஆக்கப்பட்ட 158 பேரின் 33 வது ஆண்டு நினைவேந்தல் இன்று புதன்கிழமை (05) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் அமைபின் ஏற்பாட்டில் வருடா வருடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் இத்தினத்தில் தமது உறவினர்களை நினைவுகூர்ந்து பிரார்த்தனை செய்வார்கள்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் பொலிஸ்இ இராணுவம் மற்றும் விஷேட அதிரடிப்படை முகாம்கள் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டன. மோதல் தீவிரமடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தை நோக்கி நாலாபுறமும் இராணுவ நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் சில நாட்களில் அம்மாவட்டத்தை தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள்இ பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சம் பெற்றிருந்தனர்.

அக்காலத்தில் தஞ்சம் பெற்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடைபெற்றன. அங்கிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பலர் காணாமல் போயுள்ளனர்.

அவ்வாறு காணாமல்போன சம்பவங்கள் நடைபெற்று 33 வருடங்கள் கடந்தும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற வினாவுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

கிழக்குப் பல்கலைக் கழக முகாமில் தஞ்சம் பெற்றிருந்தவர்களில் செப்டம்பர் 5ஆந் திகதி 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இழந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டதில் படுகொலை செய்யபபட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் தஞ்சம் பெற்றிருந்த நிலையில் செப்டம்பர் 5ஆந் திகதி கிழக்குப் பல்கலைக் கழக படுகொலை நாள் என உள்ளூர் மக்கள் சமூக அமைப்புகளும் பிரகடணப்படுத்தி நினைவுகூருகின்றனர்.

சம்பவ தினம் காலை 6மணிக்கு முன்னரே கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாகத்தில் இயங்கிய அகதி முகாம் இராணுவத்தினர் மற்றும் அவ்வேளை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களாலும் சுற்றிவளைக்கப்பட்டது.

கொம்மாதுறை இராணுவ முகாமிலிருந்து வருகைதந்த இராணுவத்தினரே இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். இந்த சுற்றிவளைப்பில் அவ்வேளை இராணுவ புலனாய்வில் செயற்பட்ட கப்டன் முனாஸ்; (றிச்சட் டயஸ்) கப்டன் பாலித, கப்டன் குணரத்னாஇ மேஜர் மஜீத், புளொட் மோகன் ஆகியோரும் வந்திருந்தாக காணாமல் போனோர் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணையின் போது சாட்டசியமளித்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமுக்கு பொறுப்பாக பேராசிரியர் மனோ சபாரத்தினம் கலாநிதி த.ஜெயசிங்கம் கலாநிதி வி.சிவலிங்கம் ஆகியோர் இருந்தனர்.

அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

மைதானத்தில் வரிகையில் நிறுத்தப்பட்டவர்கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு முகமூடியினால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்த சம்பவத்தை வருடங்கள் 33 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவு கூறுகிறார்கள்.

இந்த இராணுவ சீருடையில் காணப்பட்ட முகமூடி நபர்கள் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ்; ஆயுதக்குழு உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம்களாகவும் இருக்கலாம் என்ற சந்தேகமும் அவர்களிடம் காணப்படுகிறது.

இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிழக்குப் பலகலைக் கழக அகதி முகாம் அல்லோல கல்லோகப்பட்டது எங்கும் அழுகைக் குரல்களையே கேட்க முடிந்தது. அவ்வேளை அந்த பிரதேசத்திலும் மாவட்டத்திலும் நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அவர்களைத் தேடிச் செல்ல முடியாதவாறு உறவினர்களும் முகாமுக்குள் முடிங்கிக் கிடந்தனதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு சமாதான குழு பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்தது.

செப்டம்பர் 5ஆம் திகதி அன்றைய தினம் 32 பேரை மட்டுமே விசாரணைக்காக கைது அழைத்துச் சென்றதாகவும் 24மணிநேரத்திற்குள் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள் என அவ்வேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராப் பதவிவகித்த எயர்மார்சல் பெர்னாண்டோ இதற்கான பதிலை அனுப்பியிருந்தார். இந்த பதிலை மட்டக்களப்பு சமாதானக் குழு நிராகரித்தது. விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு மூன்றாம் நாள் செப்டம்பர் 8ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமுக்கு சென்று சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக கிழக்கு மாகாண இராணுவ தளபதியாக இருந்த ஜெரி சில்வா உள்ளிட்ட பாதுகாப்பு உயர்மட்டக் குழுவினரும் சென்றிருந்தனர்.

இராணுவத்தினரே எமது உறவுகளை அழைத்து சென்றதாக மக்களும் முகாம் பொறுப்பாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்த வேளை கடும்தொனியில் இராணுவ அதிகாரிகள் பதிலளித்ததாக் கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணமல் போனவர்களின் விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்டெம்பர் 5ஆந் திகதி 158 பேரையும், 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டு சென்றனர் என தெரிவித்திருந்தது.

இந்த சம்பவங்கள் நடைபெற்று; 33 வருடங்கள் கடந்த போதிலும் ஆண்டுகள் தோறும் நினைவேந்தல்கள் மாத்திரமே நடைபெறுகின்றன.

## மட்டு போலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் 157 வது போலிஸ் தினத்தையிட்டு பிரித்ஓதல் வழிபாடு





(கனகராசா சரவணன்

பொலிஸ் திணைக்களத்தின் 157 வது தினத்தையிட்டு மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பிரித்ஓதி விசேட வழிபாடு சனிக்கிழமை (2) இரவு இடம்பெற்றது.

இந்த நினைவு தினத்தையிட்டு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பகுதி மின்சார விளக்குகளால் சோடிக்கப்பட்டு பிரித் ஓதும் விசேட வழபாடு மட்டு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜி.எம்.பி.ஆர்பண்டார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இதில் கிழக்கு மாகாண சிரேஷ;ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன, சிரேஷ;ட பொலிஸ் அத்தியட்சகர் அமல். ஏ.எதிரமான, சிரேஷ;ட பொலிஸ் அத்தியட்சகர் கே.எம்.ஏ.கே பண்டார மற்றும் 14 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட பொலிசர் கலந்து ணடகாண்டனர்.

இதில் மட்டு மங்களராம விகாரையின் பிரதம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தின தேரர் தலைமையிலான தேரர்களை பூஜை தட்டுக்களுடன் அழைத்து வரப்பட்டு பிரித் ஓத அமைக்கப்பட்ட விசேட வழிபாட்டு கொட்டகையில் விசேட பிரித் ஓதும் வழிபாடு இடம்பெற்றது.

## கலைஞானி கே.ரி.குமரநாதனின் மூச்சு குறுந்திரைப்படத்தின் ஆரம்ப விழா



(த.சுபேசன்)

கொடிகாமம் நட்சத்திரமஹால் பெருமையுடன் வழங்கும், கலைஞானி கே.ரி.குமரநாதனின் ''மூச்சு'' குறுந்திரைப்படத்தின் ஆரம்ப பூஜை நிகழ்வுகள் 01/09 வெள்ளிக்கிழமை பிற்பகல் கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம்பெற்றது.

வரணி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி குறுந்திரைப்பட ஆரம்ப விழாவில் இந்து மத குரு,குறுந்திரைப்பட இயக்குனர் கே.ரி குமரநாதன், சமூக சேவகரும் நிதிப் பங்களிப்பாளருமான பரமானந்தம்,தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் க.ஈஸ்வரன்,மட்டுவில் கமலாசினி வித்தியாலய முதல்வர் கே.சந்திரகுமார்,சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

எழுத்து,இயக்கம்,தயாரிப்பு மற்றும் பாடல் உருவாக்கம் கலைஞானி கே.ரி.குமரநாதன், உதவி இயக்கம் -கே.பி.ரூபில், கலை இயக்கம்- ம.அனோஜன், சண்டைப் பயிற்சி-சி.யர்சிலீன், ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு- பி.செல்வம்,இசை- அருணா கேதீஸ் மற்றும் போஸ்ரர் வடிவமைப்பு -ஞா.தனிஸ் ஆகியோரின் கூட்டிணைவுடன் கல்வி கற்பதற்கு வறுமை தடை இல்லை என்ற மண் சார்ந்த பிரச்சனையை வெளிக் கொண்டுவரும் வகையில் ''மூச்சு'' குறுந்திரைப்படம் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தந்தையின் பிரதிநிதியின் பங்கேற்புடன் சதாசகாயமாதா திருத்தல திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாய மாதா திருத்தலத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான திருவிழா சனிக்கிழமை கொடியிறக்கத்துடன் நிறைவடைந்துள்ளது.

கடந்த 25.08.2023 திகதி திருத்தல நிருவாகி அருட்பணி ஈ.ஜேமில்ட்டன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட திருவிழாவின் நவநாட்கால வழிபாடுகள் இடம்பெற்றதுடன், திருவிழாவிற்கான பாதயாத்திரை நேற்று (02) திகதி காலை 5 மணிக்கு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பலியைத் தொடர்ந்து வவுணதீவினுடாகவும், செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்தில் காலை 5 மணிக்கு இடம்பெற்ற திருப்பலியைத் தொடர்ந்து கரடியனாறு ஊடாகவும் பல்லாயிரக்கணக்கான அன்னையின் அடியார்கள் பாதயாத்திரையாக திருத்தலத்தை சென்றடைந்துள்ளனர்.

பெருவிழா கூட்டுத் திருப்பலியினை திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பிறையன் உடைக்வே மற்றும் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அகியோர் இணைந்து காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுத்ததனைத் தொடர்ந்து அன்னையின் சுற்றுப்பிரகாரம் இடம்பெற்று, அன்னையின் ஆசீர்வாதத்துடன் கொடியிறக்கம் நடைபெற்று திருவிழா நிறைவுவடைந்துள்ளது.

அன்னையின் பக்த அடியார்களின் நன்மை கருதி திருவிழா காலங்களில் போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் மற்றும் பாதுகாப்பு, மின்சாரம் வழங்கள் போன்ற விடங்களை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 14

# ஆறுவது சினம்

*சினம் தணிந்து சீர்பெற்றுச்
சிறப்புடன் வாழ்வதே சீரான வாழ்கையாகும்*

இவ்வுலகில் வாழும் வாழ்க்கை நிஜமானது. இந்த வாழ்க்கை நமது வாழ்க்கையாகும். நிழலான வாழ்க்கை வாழ்வதை விடுத்து நம் முன்னால் உள்ள வாழ்க்கையைத் திட்டமிட்டு நம்பிக்கையோடு சீரும் சிறப்புடனும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். தேவையற்ற விடயங்களைக் கற்பனை செய்து பொலியான வாழ்க்கை வாழ்வதைத் தவிர்த்துச் சிக்கனமாக வாழ்வது நன்மை பயக்கும். எல்லோருக்கும் எல்லாமும் கிடைப்பதுமில்லை. நாம் கனவு கண்ட வாழ்க்கை அமைவதுமில்லை. நினைப்பதெல்லாம் நடப்பதுமில்லை. நடப்பதெல்லாம் நினைக்கப்படுவதுமில்லை. வாழ்க்கையில் நம்பிக்கை வைத்து முயற்சியுடன் முன்னேறினால் நாம் எதிர்பார்த்த இலக்கை அடையலாம். வாழ்க்கையில் பிடிப்பும் நம்பிக்கையும் இல்லாதவர் எந்தவொரு இலக்கையும் அடைய முடியாது. நம்பிக்கையுடன் கால் வைத்துத் துணிந்து செல்லும் பயணத்தில் நீ அடைகின்ற தோல்விகள் யாவும் வெற்றியை நோக்கிப் பயணிப்பதற்கான படிக்கற்களாகும். சோர்வடைந்தால் படியில் கால் வைக்க முடியாது. எழுந்து நிமிர்ந்து நின்று முயற்சி செய்தால் பாதை தெளிவாகும். பயணம் இலகுவாகும். தோல்வி அடைந்தவனுக்கு முயறசியும் நம்பிக்கையுமே மூலதனமாகும்.

உலகில் வெற்றி வாகை சூடிய யாவருமே நம்பிக்கை முயற்சி இரண்டையும் மூலதனமாகக் கொண்டு விடா முயற்சியோடு செயற்பட்டவர்கள். அவர்கள் வாழ்க்கையைப் பெறுமதியானதாக்கி சரித்திரமாக மாற்றிக் காட்டியவர்கள். மனதில் மயக்கமோ சலனமோ சஞ்சலமோ, குழப்பமோ இல்லாமல் தமது இலக்கை அடைய உறுதியோடு துடிப்புடன் செயலாற்றியவர்கள் விரைவில் இலக்கை அடைவார்கள். அத்தகையவர்கள் சாதாரண இச்சைகளுக்கு இடங்கொடுக்காமல் மன வைராக்கியத்தோடு செயற்பட்டதனால் இலக்கை அடைந்து கொண்டார்கள். ‘வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம்’ என்பது போல் நாம் நமக்கு முன்னால் நல்லபடி வாழ்ந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

காமம், குரோதம், பகை, கோபம், வன்மம் என்பதெல்லாம் எதிர் மறையான சிந்தனையின் வெளிப்பாடாகும். அதில் கோபம் பல எதிர்பாராத விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது. அதனால் ஔவையார் ‘ஆறுவது சினம் என்றார். ஒருவருக்கு ஏற்படும் கோபம் உடல், உளவியல் ரீதியாகப் பல தாக்கங்களை ஏற்படுத்திவிடும். கோபம் பெரும்பாலும் மூளைக்கும் மனதுக்கும் (புத்தி, சித்தம்) இடையே ஏற்படும் முரண்பாடுகள் உள நெருக்கீட்டையும் பதட்டத்தையும் ஏற்படுத்திக் கோபத்தைத் தூண்டிவிடுகின்றன. ‘அடுத்தவர் செய்யும் சிறு சிறு தவறுகளுக்கு நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளும் தண்டனை கோபமாகும்’ நமது உடல், உளத்தில் ஏற்படும் உணர்வு ரீதியான மாற்றங்களை ‘அமிக்கலா’ கட்டுப்படுத்துகிறது. ஏதாவது ஒரு காரணத்தால் கோபம் என்ற உணர்வு மூளைக்குச் செலுத்தப்படும் போது அமிக்கலா மூளையின் பிற சிந்தனையை 2 - 3 செக்கன்கள் கட்டுப்படுத்தி மூளையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும். இது கோபம் ஏற்படும் போதெல்லாம் நிகழும். பிறரினால் எதிர்மறையான உணர்வுகள் மேலும் மேலும் தூண்டப்படும்போது கோபத்தின் தன்மையும் அளவும் வேறுபடும். கோபம் அதிகரிக்க அதிகரிக்க அமிக்கலாவால் மூளை கட்டுப்படுத்தப்படும் நேரமும் அதிகரிக்கும். அவ்வேளையில் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தன்னை, தன் சுயத்தை இழந்து விடுவார். அந்த வேளையில் கோபம் கட்டுக்கடங்காமல் ஆவேசமாக வெளிப்படும். இந்த வேளையில் தான் என்ன செய்கிறேன் ஏது செய்கிறேன் என்பதறியாமல் செயற்பட்டுப் பாரதூரமான காரியங்களையும் ஏற்படுத்தி விடுவார்.

ஒருவருக்கு ஏற்படும் அடக்கமுடியாத கோபத்தினால் பல காரியங்கள் நிறுத்தப்படுவதும் உண்டு. கோபத்தை அடக்குவதற்கும், இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் அமிக்கலா காரணமாக இருக்கிறது. எதிர்மறையான உணர்வுகள் ஊடாக மூளைக்குப் பிரயோகிக்கப்படும் இரசாயனத் தாக்கங்கள் காரணமாக மூளையின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்படுகின்றது.

கோபம் வருவதற்கு ஏமாற்றங்கள், உரிய கௌரவமும் மதிப்பும் கிடைக்காமை, இம்சிக்கப்படுதல், சகிக்க முடியாமை, நியாயமாகக் கிடைக்க வேண்டியதைத் தட்டிப் பறித்தல், தமது கருத்துக்கு மதிப்பளிக்கமை, பரம்பரை பிறப்பினைக் கூறி அவமதித்தல் பரம்பரை, சூழல் காரணிகள், வீணான குற்றம் சுமததுதல். அபகீர்த்தியை ஏற்படுத்தல், குழந்தைப் பருவத்தில் அடிமனதில் பதிந்திருந்த நிறைவேறாத ஆசைகள் போன்ற பல காரணங்களால் அமிக்கலா செயற்படுவதற்கான இரசாயன மாற்றங்கள் உடலில் ஏற்படும். அவ்வேளையில் ‘அட்டேணல் ட்ரஸ்ட்’ ஏற்பட்டு அதேகணத்தில் கோபம் தூண்டப்பட்டு வெளிப்படுத்தப்படும். இக்கோபத்தைக் கையாழ்வதிலேயே ஒருவரின் எதிர்காலம் தங்கி இருக்கிறது. முகாமைத்துவத்தில் கோபத்தைக் கட்டுப்படுத்த கோப முகாமைத்துவம் என்றொரு தனிப்பிரிவும் முகாமைத்துவத்தில் இருக்கிறது.

அலுவலகத்தில் வேலைச் சுமை, எதிர்பார்க்கை நிறைவேறாமை, உரிய பதவி அந்தஸத்துக் கிடைக்காமை, குடும்பப் பிரச்சினைகள் நெருக்கீடுகள், தனக்குரிய மதிப்பு மரியாதை கிடைக்காமை, தனிமைப்படுத்தல், நோய்கள், மன அழுத்தம் என்பவற்றாலும் கோபம் ஏற்படலாம். கோபத்தினால் பதட்டம், நெருக்கீடு, உடல், உளப் பாதிப்பு, மன உழைச்சல், நரம்புத் தளர்ச்சி, இரத்த அழுத்தம், உடல் நடுக்கம் என்பனவும் வெளிக்காட்டப்படலாம். இந்நிலை தொடர்ந்து நீடித்தால் காலப் போக்கில் மன நோயாளியாகி விடுவார்கள்.

அன்பின் வேறொரு விதமான வெளிப்பாடாகக் கோபம் கருதப்படுவதனால் அதனை அவதானமாகக்



கையாழுதல் வேண்டும். எங்கும் எவ்விடத்திலும் அடுத்தவருக்குக் கோபம் ஏற்படாதவாறு நடந்து கொள்ளல். மற்றவர்களைப் பற்றிக் குறை கூறாமை. யாராவது உங்கள் மீது கோபப்பட்டால் அவ்விடத்தில் இருந்து விலகிச் செல்லலாம் அல்லது மன்னிப்புக் கேட்கலாம. நாம் கோபப்படும்படி யாராவது நடந்து கொண்டால் தன்னை அமைதியாகத் தனிமையில் இருக்க விடுங்கள் எனக் கூறலாம். தவறுகளுக்கு யார் காரணம் எனப் பரிசீலித்துத் தான் காரணமாக இருந்தால் மன்னிப்புக் கேட்டுத் திருத்திக் கொள்ளலாம். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ளல், நல்லதைச் செய்தல். நீர் அருந்துதல், விருப்பமான பாடலைச் செவிமடுத்தல், கண்மூடி மௌனமாக இருத்தல் ஆகியவற்றைக் கையாண்டு கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

கோபம் வரும்போது கண்ணை மூடிக் கொண்டு 2 - 3 செக்கன்கள் அமைதியாக இருப்பதனால் கோப உணர்வினைத் தூணடும் அமிக்கலா இரசாயனத்



சோலையூர்க்
குருபரன்

தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டு புத்தி (மூளை) சித்தம் ஆகிய இரன்டும் சாந்தமாகி இயல்பு நிலையடையும். கோபம் ஏற்படும் போது அதிக ஓமோன் சுரப்பதோடு தசைகளும் இறுக்கமடைகின்றன. சிரிக்கும்போது சக்தி உள்வாங்கப்படுகிறது. கோபம் ஏற்படும் போது பெருமளவு உயிர்ச்சக்தி வெளியேறுகின்றது. அதனால் ஆயுள் குறைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மனதைச் சமநிலைப்படுத்த முடியாமல் அடிக்கடி கோபப்படுவதனால் காலப் போக்கில் மனநோய், மார்படைப்பு, நீரிழிவு, பக்கவாதம், குடல் புண், குடல் புற்று நோய், கைப்பர் தையரொய்ட்ஸ் ஆகிய நோய்களும் ஏற்படலாம். கோபத்தின் காரணமாகக் குடும்பத்தின் அமைதி குலைந்து, பல பிரச்சினைகள் உருவாகலாம். கட்டுப்படுத்த முடியாத கோபம் காரணமாகப் பல குடும்பங்கள் பிரிந்திருக்கின்றன.

நமது கோபத்தை நாம் உண்ணும் உணவுகளும் தீர்மானிக்கின்றன. காரம் (உறைப்பு) அதிகமுள்ள உணவுகளை உண்பதனால் இரைப்பையில் அமிலம் அதிகம் சுரந்து உடல் வெப்பத்தை அதிகரித்துப் பதட்டமான மனநிலையை ஏற்படுத்திக் கோபம் தூண்டப்படுகிறது. பொதுவாக எல்லா எண்ணெய்களிலும் ட்ரான்ஸ் கொழுப்பு இருக்கிறது. எண்ணெயில் பொரித்த உணவுகளை உண்பதனால் ட்ரான்ஸ் கொழுப்பு அதிகரித்து ஒமேக்கா பெட்டி அமிலம் அதிகம் சுரக்கிறது. அதனால் குருதி சூடேறி வெப்பம் அதிகரித்துக் கோபம் தூண்டப்படுகிறது. கோப்பி, பால் தேநீர், தேநீர் ஆகியலற்றை அதிகம் பருகுவதனால் உடல் சமநிலை குழம்பி உடல் வெப்பம் அதிகரிப்பதனால் கோபம் தூண்டப்படுகிறது. அதனால் நித்திரையும் பாதிப்படையும். எழிதில் சமிபாடடையக்கூடிய பிஸ்கட், சிப்ஸ், சீவல், நொருக்குத் தீனிகள், பக்கட்டில் அடைத்த உணவுகள்(ஒதணடு ஒூணிணிஞீண்) ஆகியவற்றில் சீனி, உப்பு, ட்ரான்ஸ் கொழுப்பு அதிகம் உள்ளதனால் நீரிழிவு நோய், குருதி அழுத்தம் ஏற்பட்டு கோபம் தூண்டப்படுகிறது. சுயிங்கம், மிட்டாய், ஐஸ் கிறீம், செயற்கைச் சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவுகளை உண்பதனால் உணவுச் செரிமானம் பாதிக்கப்பட்டு மனதில் எரிச்சல் தோன்றி கோபம் ஏற்படுகிறது.

அதேபோல் பிறியாணிச் சாப்பாடு, பிறைட் ரைஸ், கொத்து ரொட்டி, பீட்சா, நூடில்ஸ் போன்ற துரித உணவுகளை அதிகம் உண்பதனால் செரிமானம் குழம்பி குடல்சோர்வு, எரிச்சல் ஏற்பட்டு கோபம் தூண்டப்படுகிறது. இந்நிலை மேலும் தொடர்ந்தால் அல்ககோல் கார்கோலை வெளியிடச் செய்து, நரம்பு மண்டலத்தைத் தாக்கி, கட்டுப்படுத்த முடியாத கோபத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதனால் மன அழுத்தம், பதட்டம், மன உழைச்சல் ஏற்பட்டு ஆயுள் பாதிக்கப்படுகிறது. மேலும் இவ்வகைப்பட்ட உணவுகளைப் பெண் பிள்ளைகள் உண்பதனால் சிறுவயதில் பூப்படைகின்றனர். பெண்கள் உண்பதனால் மாதவிலக்குச் சுளர்ச்சி பாதிப்படைந்து பிள்ளைப் பேறும் பாதிக்கப்படுகிறது. அதனால் எரிச்சலும் பதட்டமும் அதிகரித்துக் கோபம் தூண்டப்படுகிறது. . அதனால் கெட்ட கொழுப்புகள் உடலில் அதிகரித்து பலர் மார்படைப்புக்கும் ஆளாகின்றனர்.

இவ்வகைப்பட்ட உணவுகளால் இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்டோரில் 65 வீததானோர் தொற்றா நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 70 வீதத்துக்கு மேற்பட்டோர் அடிக்கடி கோபப்படுபவர்களாக அறியப்படுகின்றனர். பதட்டம், பதகளிப்பு, நெருக்கீடு, மனச்சோர்வு, மன உழைச்சலுக்கும் உள்ளாகி அடிக்கடி கோபத்துக்கு ஆளாகின்றனர். கோபத்தின் காரணமாக மாரடைப்பு, மன அழுத்தம், இதயநோய், இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறுகள், தூக்கமின்மை, மூளைவாதம் ஆகிய பிரச்சினைகள் தோன்றும். கோபம் தன்னையும் அழித்துப் பிறரின் சந்தோசத்தையும் கெடுத்துவிடும். கோபம் ஒரு மனிதனின் வெற்றிக்குத் தடையாக உள்ளது. கோபத்தினால் நமது சிந்தனை, கவனம் என்பன சிதறடிக்கப்பட்டு நாம் செய்ய வேண்டிய செயலையும் பாதித்து விடுகின்றன. அதனால் நாம் மாத்திரமன்றி நம்மைச் சுற்றி உள்ளவர்களும் பாதிக்கப்படுகின்றோம். கோபமும் மகிழ்ச்சியும் ஒன்றுக்கொன்று எதிரானது என்பதனால் கோபம் மகிழ்ச்சியைப் பறித்துவிடும். உடல் வெப்பம், அறை வெப்பம் ஆகியனவும் கோபம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அயன வலய நாடுகளில் வெப்பம் அதிகமாக உள்ளதனால் அந்நாடுகளில் வாழ்வோரில் பெரும்பாலானோர் அதிக வெப்பத்தின் தாக்கத்துக்கு உள்ளாகி அடிக்கடி எரிச்சலையும் கோபத்தையும் வெளிக்காட்டுகின்றனர்.

‘உறவுக்குப் பகை கடன்’ என்பது போல் அடிக்கடி சினம் கொள்வதனால் உறவுகள் நம்மைவிட்டுப் பிரிந்து செல்வதற்கும், குடும்பங்களில் மன முறிவுகள் ஏற்படுவதற்கும், பல குடும்பங்கள் பிரிவதற்கும், நல்ல நண்பர்களை இழப்பதற்கும், பிள்ளைகளின் வாழ்க்கை நிற்கதி ஆவதற்கும், பலரைப் பகைத்துக் கொள்வதற்கும் காரணமாக அமைகின்றன. இராமாயணத்தில் கைகேகியும், சூர்ப்பனகையும் கோப்பட்டதனால் இராம, இராவண யுத்தம் நடந்தது. மகாபாரதத்தில் துரியோதனன் கோபப்பட்டதனால் மகாபாரத யுத்தம் நடந்தது. முசோலினி, அடோல்ப் ஹிட்லர் ஆசை கொண்டு கோபப்பட்டதனால் இரண்டாம் உலகமகா யுத்தம் நடந்தது. வல்லாதிக்கம் காரணமாக ரசிய ஜனாதிபதி விளாமிர் புட்டினின் பேராசையும் கோபமும் ரசிய உக்கிரேன் யுத்தத்தைத் தோற்றுவித்து நேட்டோ நாடுகளையும் அதில் பங்கு கொள்ளச் செய்து பாரிய யுத்தமாக நடந்து கொண்டிருக்கிறது. பல அரசர்களின் கோபமும் பேராசையும் அவர்கள் பலரின் வம்சத்தையே அழித்துவிட்டன.

கோபம் உணர்ச்சிகளால் தூண்டப்படுவது. கோபம் எனும் உணர்வு தூண்டப்படுவதற்கு நமது உடலிலுள்ள சில சுரப்பிகள் காரணமாக அமைகின்றன. அதில் அமிக்கலா செல்வாக்குச் செலுத்துகிறது. நமது உடல் ‘மனிதம் பாதி மிருகம் பாதி சேர்ந்து செய்த கலவை’ போன்றது. நமது மூளையின் செயற்பாடுகள் மனித குணமும் மிருக குணமும் கொண்டே இயக்கப்படுகின்றன. மூளையின் செயற்பாடுகளுக்கு மனதின் ஆதிக்கமும் செல்வாக்குச் செலுத்துகிறது. ‘மனம் போல் வாழ்வு’ ‘எண்ணமே வாழ்வு’ என்பதுவும் ‘நீ எதை நினைக்கிறாயோ அது போலவே ஆகுகிறாய்’ என்ற சுவாமி விவேகாநந்தரின் வாக்கும் இந்த உண்மையைப் புலப்படுத்துகின்றன. நமது மன உணர்ச்சிகளால் தூண்டப்படும் நினைப்பு கோபத்துக்குரியதாக இருந்தால் அமிக்கலாவால் கோபம் தூண்டப்பட்டு கோபம் தணியும்வரை மூளை அமிக்கலாவின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. அந்த சில விநாடிகளுக்குள் கோபம் செய்ய வேண்டியதைச் செய்து விடுகிறது. அதற்குத் தூண்டித் துலங்கல் பேறுகள் காரணமாக இருக்கின்றன. ஒருவர் மீது அல்லது பலரின் மீது தூண்டப்பட்ட கோப உணர்வு படிப்படியாகத் தூண்டல் பேறடைந்து மனம், மூளை என்பவற்றால் கட்டமைக்கப்பட்ட உணர்வுகள் சொல், செயல் வடிவமாக உடலால் வெளிக்காட்டப்படுகிறத.

நமக்கு நாமே கொடுக்கும் தண்டனை கோபம் என்பதனால் அதனை நாமே அடக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். சிலர் தமக்கு ஏற்பட்ட கோபத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் துன்பப்படுவார்கள். எதிர்மறையான விடயங்கள் மிருக குணத்தோடு தொடர்புபட்டதாக அருக்கும். அடிக்கடி உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள் விரைவில் கோபமடைவார்கள். இவர்களால் விரைவாகக் கோபத்தைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கும். பதவி, அதிகாரம், செல்வாக்கு, பக்கபலம் உள்ளவர்களில் பெரும்பாலானோர் நான் என்ற மமதையில் செயற்படுபவர்களும் தான் செய்யும் தவறுகள், குற்றங்களை ஏற்றுக் கொள்ளாமல் மற்றவர்கள் மீது சுமத்துவதிலும். குறைகூறுவதிலுமே கவயமாய் இருப்பார்கள். எடுத்தெறிந்து பேசுவதோடு அடிக்கடி கோபப்படுவார்கள். அவர்களுக்கு பின் மூளையின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும். எதிர்மறையான செயற்பாடுகளால் மிருக குணம் ஆதிக்கம் பெற்றிருக்கும். சிலர் ‘நான் பெரிய கோபக்காரன். என்னைப் பற்றித் தெரியும்தானே. நான் எப்படிப்பட்டவன் என்று’ இவ்வாறு கூறுபவர்கள் எல்லோரும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அமிக்கலாவின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள். சிலர் மற்றவர்களுக்கு முன்னால் ஒருவரை அவமானப்படுத்தி மற்றவரிடம் கூறச் சந்தோசப்பட்டுக் கொள்வார்கள். சிலர் தான் கோபக்காரன் என்பதனை மற்றவர் கூறும்படி நடந்து கொள்வார்கள். சிலர் எந்த நேரமும் சிடு மூஞ்சு போல் தோற்றமளிப்பார்கள். இத்தகையவர்கள் பல நோய்களை உள்வாங்கி மருந்தும் கையுமாக இருப்பார்கள்.

நமது சீரான, மகிழ்ச்சிகரமான, சந்தோசமான, நிம்மதியான வாழ்க்கைக்குக் கோபத்தைக் கட்டுப்படுத்தி வாழ்வதே சிறந்ததாகும். ‘சந்தோசத்திலும் மிகப் பெரிய சந்தோசம் மற்றவரைச் சந்தோசப்படுத்துவது’ என மற்றவரைச் சந்தோசப்படுத்தி வாழ்பவர் கோபப்பட்டு மற்றவரின் மனதைப் புண்படுத்தமாட்டார். கோபப்படுவதனால் எதனையும் சாதிக்க முடியாது. பல சந்தர்ப்பங்களில் இருப்பதையும் இழக்கும் சூழ்நிலையே உருவாகும். கோபக்காரர் எனப் பெயர் எடுத்துவிட்டால் அந்தப் பெயர் பலருக்கு வாழ்நாள் முழுவதும் அவரோடு ஒட்டி இருக்கும். அத்தகைய பெயரை எடுத்துக் கொள்ளாமல் ஔவையார் கூறுவது போல் சினம் தணிந்து வாழ்வதே சிறந்ததாகும்.



*சோதனை மிகுந்தது முதுமைக்காலம்
சோதனைகளைச் சாதனைகளாக்கி
சாதித்துவிடலாம் முதுமைக் காலத்தில்*

# முஸ்லீம்கள் அடையாளத்தை விட்டு விலகாத ஏனையவருடன் ஒன்றித்து செல்ல வேண்டிய கட்டாயமும் உள்ளது

## பலஸ்தீன் பிரதி உயர் ஸ்தானிகர் ஹீசாம் அபூ தாஹா

**(வாஸ் கூஞ்ஞ) 04.09.2023**

தனித்துவமாக எமது அடையாளத்தை விட்டு விலகாத உங்கள் கலை கலாச்சார விழுமியங்கள் பௌத்தர்களுடன் ஒன்றித்து செல்ல வேண்டிய கட்டாயமும் உள்ளது. இதை உணர்ந்து முஸ்லீம்கள் நீங்கள் செயல்பட வேண்டும். அத்துடன் தலைமைத்துவத்துக்கு நீங்கள் வருமுன் உங்கள் கல்வி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் எல்லாவற்றிற்கும் முக்கியமானது என பலஸ்தீன் பிரதி உயர் ஸ்தானிகர் ஹீசாம் அபூ தாஹா இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னனி மன்னார் மாவட்ட குழுக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை (03) காலை 8.30 மணித் தொடக்கம் மாலை 4 மணி வரை மன்னார் ஆகாஷ் ஹொட்டலில் இடம்பெற்றபோது பலஸ்தீன் பிரதி உயர் ஸ்தானிகர் ஹீசாம் அபூ தாஹா இங்கு இளைஞர் மத்தியில் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இளைஞர்களே தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தலைமைத்துவத்துக்கான காலம் இன்னும் உங்களுக்கு இருக்கின்றது.

சிறு வயதிலிருந்து நீங்கள் வளரும்பொழுது உங்களுக்கு அந்தந்த காலத்தில் செயல்படக் கூடிய தகுதிகளும் உங்களுடன் வளர்ந்து வருகின்றது.

நான் இன்று உங்கள் முன் ஒரு பலஸ்தீன ஒரு பிரதி உயர் ஸ்தானிகராக இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள ஆற்றல்களிலும் திறமைகளிலும் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

எங்களிடமுள்ள இறை நம்பிக்கையும் ஒவ்வொருவரிடமும் உள்ள தொடர்புகளும் எல்லாவற்றையும் தாண்டி ஒருங்கிணையக் கூடியதாக இருக்கின்றது.

எங்களது சமூகத்தினரும் உலகத்தினதும் சுபீட்சத்துக்காக எங்களது ஆற்றல்கள் உதவி செய்யும் என நாம் நம்பிக்கைக் கொள்ள வேண்டும்.

உண்மையில் இலங்கையிலுள்ள முஸ்லீம்களுக்கான தலைமைத்துவ அடையாளங்கள் நிறைய இருக்கின்றன. கலை கலாச்சார சமய நம்பிக்கைகள் எங்களிடம் பலமாக இருக்கின்றன.

ஆகவே நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இவற்றை நம்பிக்கையாகக் கொண்டு நாட்டுக்கும் உலக மட்டத்திலும் முன்னுதாரணமான செயல்பாடுகளை நாம் செய்ய வேண்டும்.

நான் இங்கு உங்களுக்கு சொல்வதை நீங்கள் எற்றுக் கொண்டாலும் அல்லது ஏற்றுக் கொள்ளாவிடினும் உங்களுக்கு இதை குறிப்பிட்டே ஆக வேண்டும்.

நீங்கள் அரபு நாடுகளிலோ அல்லது அரபியர்களுடனோ வாழவில்லை. மாறாக நீங்கள் பௌத்த மக்களுடனே வாழ்கின்றீர்கள்.

எனவே உங்கள் கலை கலாச்சார விழுமியங்கள் பௌத்தர்களுடன் ஒன்றித்து செல்ல வேண்டிய கட்டாயமும் உள்ளது. இதை உணர்ந்து நீங்கள் செயல்பட வேண்டும்.

அதேபோல் நீங்கள் முஸ்லிமாகவே இருக்க வேண்டும். அதுவும் இலங்கை முஸ்லீமாகவே வாழ வேண்டும்.

உங்கள் நடை உடை பாவனைகள் தனித்துவமாக எமது அடையாளத்தை விட்டு விலகாத ஒன்றாக இருக்க வேண்டும்.

இங்குள்ள பெண்களை பார்க்கின்றபோது நான் அரபு நாட்டு முஸ்லீமாகவே உணர்கின்றேன். எனக்கு நிறைய பௌத்த நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் என்னிடம் கேட்பது ஏன் முஸ்லீம் பெண்கள் இந்த அபாயாவை அணிகின்றனர் என்று.

இலங்கையில் முஸ்லீம் பெண்களுக்கான தனித்துவமான சாறிகள் இருக்கின்றன. ஏன் அவைகளை இவர்கள் அணிய மறுக்கின்றனர் எனவும் கேட்கப்படுகின்றது.

தலைமைத்துவத்துக்கு நீங்கள் வருமுன் உங்கள் கல்வி அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் எல்லாவற்றிற்கும் முக்கியமானது.

இதை வைத்துக் கொண்டே காலத்துக்கு ஏற்றவாறு உங்கள் தலைமைத்துவத்தை வளர்த்துக் கொள்ள முடியும்.

முறண்பாடுகளில் சமன் பாடுகளை நாம் நாடும்போதுதான் ஒற்றுமையையும் சமன்பாடு காண அமைகின்றது. இலங்கையில் இருக்கும் காலத்தில் நான் இதை நன்கு அவதானித்துள்ளேன்.

ஆகவே இந்த நாட்டுக்கு ஏற்றவாறு நாம் வாழும்போது நல்ல விழுமியங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

முஸ்லீம்களாக பிறந்திருப்பதில் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். இதை வைத்துக் கொண்டு நாம் மற்றவர்களின் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குரான்படி நாம் மற்றறைய சமூகத்தினரை மதித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

இக்காலம் மிக துரிதமாக மாறும் காலமாக இருந்து வருகின்றது. ஆகவே இவற்றை நாம் புரிந்து கொண்டு சூழலுக்க ஏற்றவாறு வாழ முன்வர வேண்டும்.

அத்துடன் நாம் சர்வதேச மட்டத்ணீலும் சிந்திக்க வேண்டும். நாம் அரசியல் அல்லது பொருளாதார மட்டத்திலும் உயர்ந்து வந்தாலும் நாம் மனிதர்களே எம்பதை மனதில் இருத்தி மனித பண்பாட்டுடன் வாழ வேண்டும்.

திறந்த மனதுடன் செயல்பட வேண்டும். ஈற்றில் உங்கள் தலைமைத்துவம் அன்பு பாசம் நிறைந்த ஒன்றாக மலர எனது வாழ்த்துக்கள் என இவ்வாறு தெரிவித்தார்.

# நினைவுகளை மீட்கும் வெள்ளிவிழா






**(அ . அச்சுதன்)**

திருகோணமலை இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் 1998ம் ஆண்டில் உயர்தரம் கல்வி கற்று 25 ஆண்டினை நினைவு கூறும் முகமாக நினைவுகளை மீட்கும் வெள்ளிவிழா சனிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி . தண்டாயுதபாணியும் , கௌரவ விருந்தினர்களா முன்னாள் அதிபர் மா. இராசரெத்தினமும் தற்போதைய இந்துக்கல்லூரியின் அதிபர் வி. இராஜேந்திரன் அவர்களும் 1998 ம் ஆண்டில் உயர்தரத்தில் கற்பித்த ஆசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

1998 ம் ஆண்டு உயர்தர பிரிவு கல்வி கற்ற மாணவர்களுடன் குடும்பத்தினரும் விழாவில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் கௌரவிக்கும் நிகழ்வு






**(பாறுக் ஷிஹான்**

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் வகுப் நியாய சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(3) இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றெளசுல் ஹாதி தலைமையில், நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் மற்றும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. றெளசுல் ஹாதி ஆகியோருக்கு நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகள் புடை சூழ சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் பொறியியலாளர் ஏ. ஹிபத்துல் கரீம் கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வைத்தியர் எஸ்.எம்.ஏ அஸீஸ் கல்முனை வர்த்தக சங்க தலைவர் கே.எம்.எம். சித்தீக் உள்ளிட்ட பாடசாலை அதிபர்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இதன் போது ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய ‘‘-LAW OF ACTIONS‘‘ என்ற நூலின் அறிமுக நிகழ்வு இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவிலில் களைகட்டிய 157 போலிஸ் தின நிகழ்வு

## மாவட்ட போலிஸ் அத்தியட்சகர் ஜெயபத்ம பங்கேற்பு




**( வி.ரி. சகாதேவராஜா)**

இலங்கையின் 157ஆது பொலிஸ் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த பாரிய அளவிலான நிகழ்வு களைகட்டியது.

திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.பத்மகுமார தலைமையில் (3) இந் நிகழ்வில் அம்பாறைமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜெயபத்ம பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

முன்னதாக திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து கலாச்சார பாரம்பரிய ஊர்வலத்துடன் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு பூசைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டது.

ஆலயத்தில் விஷேட பூசை நிகழ்வுகளை ஆலய குரு சிவஸ்ரீ கேயூரநாத சர்மா நடாத்தினார். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கே.தேசப்பிரிய மற்றும் திருக்கோவில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் விநாயகபுரம் வலம்புரி அமைப்பினர், அறநெறி மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொலிஸ் குடும்பத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், அறநெறி பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் நடுக் காட்டுக்குள் சத்ரு சம்ஹார ஹோமம்

**( வி.ரி. சகாதேவராஜா)**

நள்ளிரவு நேரத்தில் நடுக் காட்டுக்குள் சண்முக சக்கர யாக குண்டத்தில் ஆறு சக்திகளாக ஆறு லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு ‘சத்ரு சம்ஹார ஹோமம்’ சிறப்பாக நடைபெற்றது.

உலக சேமம் கருதி சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் , இந்திய குபேர குருஜி ஆனந்த் முன்னிலையில் நம்முடைய ஆறு ஆதார சக்கரங்களை விழிக்க வைக்கும் ‘சத்ரு சம்ஹார ஹோமம்’ முழுமையாக 3 மணி நேரத்திற்கு மேல் கபில்வத்தையிலுள்ள கபிலவனத்தில் இடம் பெற்றது.

அந்த இடத்தில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களும் சிவயோகிகளாக அமர்ந்து லட்ச கணக்கில் மந்திர ஜெபங்களை காற்றில் விட்டபடி ஆழ்ந்த தவத்தில் மூழ்கி இருந்தார்கள்.

இரவு முழுவதும் இயற்கையில் இருந்து அபூர்வ ஆற்றல்களை பெரும் மகாதேவ ம்ருத்யஞ்சய தவம் பஞ்சாட்சர ஜெபத்துடன் நடந்து கொண்டே இருந்தது.

எத்தனையோ பேருக்கு எத்தனையோ காட்சிகள், தரிசனங்கள் கிடைத்தன. எல்லாம் அந்த இறையருள்... எல்லோருக்கும் அந்த பூரண ஆசீர்வாதங்கள் முழுமையாக கிடைக்க பிரார்த்தனை இடம்பெற்றது.



# தென்றல் சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடு



(எருவில் துசி)

மட்டக்களப்பு கல்லடியிலிருந்து காலாண்டுச் சஞ்சிகையாக கடந்த 15 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் தென்றல் சஞ்சிகையின் 60 ஆவது இதழ் வெளியீடு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (02) அரங்கேறியது.

தென்றல் சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

தென்றல் சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனால் தென்றல் கொடியேற்றப்பட்டு ஆரம்பமான நிகழ்வில், அகவணக்கம், அகல் விளக்கேற்றல், தென்றல் கீதம் இசைத்தல், அதிதிகள் உரை ஆகியன இடம் பெற்றது. இதன்போது தென்றல் சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனால் 60 ஆவது இதழின் முதல் பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்திக்கு வழங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து அவர் சிறப்பு, கௌரவப் பிரதிகளை வீசுதென்றல் விருது பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து அதிதிகளால் நாடளாவியில் தெரிவு செய்யப்பட்ட ஆ.மூ.சி.வேலழகன், மூ.அருளம்பலம், செ.குணரத்தினம், கா.சிவலிங்கம், இ.நல்லையா, திருமதி மாலினி அஜந்தன், சீ.கோபாலசிங்கம், திருமதி ஜெகதீஸ்வரி நாதன், மா.திருநாவுக்கரசு, மீரா முகைதீன் ஜமால்தீன், திருமதி இந்திராணி புஸ்பராஜா, பரதன் கந்தசாமி, திருமதி வேதநாயகி குணநாயகம், தி.பத்மநாதன், செ.துரையப்பா, பெ.பேரின்பராசா, த.கோபாலகிருஷ்ணன், வீ.வீரசொக்கன், தம்பி சாகித் சித்தி பரிதா, தி.சத்தியநாதன், மி.அருள்மொழிராஜா, ஏறாவூர் தாஹிர், எஸ்.இரவீந்திரன், முகம்மது லெவ்வை முகம்மது பாறூக், எஸ்.தியாகராஜா, க.ரெட்ணையா, திருமதி சுந்தரமதி வேதநாயகம், வி.பத்மசிறி, ஆத்மராஜா றூத் சந்திரிக்கா, பெ.ஹரிச்சந்திரா, வா.கிருஸ்ணகுமார், சீ.தரணீஸ்வராநந்தா, மா.சசிகுமார், அனோஜா பவளேந்திரன், சி.புரவர்த்தனி, எம். சிவகுமார், ம.புருஷோத்தமன், ச.மதன், த.இன்பராசா, கிறிஸ்தோபர் கிறிஸ்டிராஜ், ஏ.எல்.எம்.சலீம், க.பகீரதன், உ.உதயகாந், கு.கோடீஸ்வரன், தே.லோகவியாசன், க.பாக்கியராஜா, த.மதியழகன், மு.விஸ்வநாதன் மற்றும் வீ.றஞ்சிதமூர்த்தி ஆகியோர் வீசுதென்றல் விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருது பெற்ற கலைஞர் சார்பில் கதிரவன் த.இன்பராசா பாராட்டுரையையும், தென்றல் சஞ்சிகை ஆசிரியர்பீட உறுப்பினர் த.செல்வராணி நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்வுகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் பெ.ஹரிச்சந்திரா தொகுத்து வழங்கினார்.

# அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கோர்பச்சேவ் ஓராண்டு நினைவு !!



முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகையில் கொர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவரும் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் கடந்த வருடம் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.

கோர்பச்சேவை சோவியத்தின் சீர்திருத்தவாதி என்றும், புதிய அணுகுமுறையால் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்களும் பெரும் நம்பிக்கை கொண்டு கோர்பச்சேவை வரவேற்றனர்.

## 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு

அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்களும், கிரெம்ளினும் முதலில் புதிய கொள்கைகளை வரவேற்றனர்.

கோர்பச்சேவ் பதவி ஏற்றவுடன் மேற்கத்திய உலகும் பொதுவாக பாராட்டினர். 'கோர்பச்சேவ் அரசியல் பாணியால் மாஸ்கோ மாறலாம் என்றும், அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன.

இதனாலேயே 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு கொர்பச்சேவுக்கு வழங்கப் பட்டது. எனினும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக நடந்துகொண்டதாக ரஷ்யாவில் அவருக்குக் கண்டனக் கணைகளும் எழுந்ததும் உண்மையே.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்டு ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்துகொண்டார் கொர்பச்சேவ். 1987-ல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப் பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.

## பனிப்போர் முடிவு ;

சோவியத் வீழ்ச்சி அடையும் கால கட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத்துருப்புகள் 1988-ல் திரும்பப் பெறப்பட்டன. அதே போல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.

1989-ல் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷைச் சந்தித்த கொர்பச்சேவ், பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார். 1980-களின் இறுதியில் இரும்புத் திரை நாடுகள் என்று மேற்கத்திய நாடுகளால் கருதப்பட்ட செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகள் ஜனநாயகப் பாதைக்குச் செல்வதை அவர் தடுக்கவில்லை என்றும் புகழப்பட்டார்.

## பெரஸ்ட்ரோயிகா - கிளாஸ்நாத் ;



கோர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களும் சோவியத் யூனியனின் பொருளாதார, அரசியல் வளர்சசிக்கு உந்துசக்தியாகும் என முதலில் எதிர்பார்க்ப்பட்டது. ஆயினும் பிரச்சினைகளைத் தீர்த்ததா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்த சீர்திருத்தங்கள் பலனை உடனடியாகத் தரவில்லை. சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கப் பொருளாதாரத்தைச் சந்தை பொருளாதாரம் திடீரென ஓரிரவில் மாற்றுவது இலகுவானதல்ல.

சந்தை பொருளாதாரம் முதிர்ச்சியடைய அதிக காலம் வேண்டும் என்பதால் அது வெற்றியடைவில்லை. அதனாலேயே கோர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களின் பலன்கள் தாமதமாகத்தான் வரும் என்பதால் அப்போது இருந்த பிரச்சினைகள் குறையவில்லை என்பதும் உண்மையே.

## சோவியத் ஒன்றிய வீழ்ச்சி :

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கோர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவு படுத்தினார். இருந்த போதிலும் கோர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

கிழக்கு ஐரோப்பாவில் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் துவங்கியது. கோர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது.

## அணு ஆயுத கட்டுப்பாடு ;

செர்னேபில் அணு உலை விபத்து ஏற்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 1996-ல், மிக்கேல் கோர்பச்சேவ் கூறுகையில் ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான பிள்ளைகள் இறக்கிறார்கள் என்ற காரியத்தை மனிதகுலம் இனி சகித்துக்கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாங்கள் தயாராய் இருக்கவே இல்லை. இந்த அவல நிகழ்ச்சி, மனிதகுலம் கண்



டுபிடித்திருக்கும் ராட்சத சக்திகளை இதுவரை கட்டுப்படுத்த முடிவதில்லை என்ற உண்மையின் கொடூர நினைப்பூட்டுதலாய் இருந்ததாக அப்போதைய சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கோர்பச்சேவ் குறிப்பிட்டார்.

மே 1990இல் வாஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று யோசனையை தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் அதிபர் மிகேயல் கோர்பச்சேவும் அமெரிக்க ரோனால்டு ரீகனும் மாஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கோர்பச்சேவ் சொன்னார். இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என சோவியத் தலைவர் மிக்கேல் கார்பஷாவ் எழுதிய பெரஸ்ட்ரோய்க்கா (Perestroika) நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் க்ளாஸ்நாஸ்ட் மற்றும் பெரஸ்ட்ராய்க்கா கோட்பாடுகளை செயலுக்குக் கொண்டுவருவதில் கொர்பச்சேவ்வுக்கு இருந்த ஆர்வமே, சோவியத் உடைவுக்கும், அவர் சோசலிச-கம்யூனிஸத்தை உலகில் அழிக்க அமெரிக்காவுடன் சேர்ந்து நோக்கம் கொண்டிருந்தார் என்றும் ரஷ்யாவில் இன்னமும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆயினும் உலக அமைதிக்காக அணு ஆயுத குறைக்க முன்னோடியாக இருந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்.

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**



# தேரோட்டம் என்ன நடந்தது

கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் தேரோட்டம் -03/09/2023-ஞாயிற்றுக்கிழமை ..!

வரலாற்றில் முதல் தடவையாக சித்திரத்தேருக்கு ஐந்து (5)வடங்கள் பூட்டி இழுக்கப்பட்டது!

ஏற்கனவே மூன்று வடங்கள், இரண்டு வடங்கள் மட்டும் சித்திரதேருக்கு பூட்டி இழுக்கப்பட்ட வரலாறுகள் உண்டு.

ஆனால் ..

வழமை போன்று வினாயகர் தேர் இரண்டு வடங்கள் பூட்டப்பட்டு பி.ப:4.35, மணிக்கு இழுக்கப்பட்டு வடகிழக்கு பக்கம் நிறுத்தியபின்னர்

4அது போன்று சித்திரத்தேர் மூன்று வடங்கள் பூட்டப்பட்டு அடியார்கள் இழுத்தபோது வடம் (கயிறு) அறுந்தது.

பின்னர் அதனை முடிச்சுப்போட்டு திரும்பவும் இழுத்தவேளை அதுவும் அறுந்தது மூன்றாவது தடவையும் அறுந்தது பின்னர் நீற்றுபூசனி வெட்டி தேங்காய்கள் தேர் சில்லுகளுக்கு வண்ணக்குமார்அடித்து நொறுக்கியபின்னர் திரும்பவும் இழுத்தபோது நாலாவது தடவையும் வடம் அறுந்தது, அதன் பின்னர் நீற்றுபூசனிக்காய்கள் நான்கு சில்லுக்கு பக்கத்தில் வைத்து வெட்டி மீண்டும் சித்திரத்தேர் இழுத்தபோது ஐந்தாவது தடவையும் வடம் அறுந்தது.

அதன் பின்னர் பிரதமகுரு சிவ'ரீ மு.கு.சச்சிதானத்தக்குருக்கள் அவர்கள் சித்திரத்தேரில் இருந்து இறங்கிவந்து தேர் சில்லுகளை தொட்டு வணங்கிவிட்டு மூலவரின் அறையில் சென்று மௌனப்பிரார்தனை செய்து மூலவரின் முன் தேங்காயில் சூடம் ஏற்றி அதனை அங்கிருந்து சித்திரத்தேரை சுற்றி வணங்கிய பின்னர் அந்த தேங்காயை ஆலயத்தின் வெளிவீதியில் ஆலய வாசலில் உடைத்தார்.

பின்னர் மீண்டும் சித்திரத்தேரில் அவர் ஏறிய பின்னர் வினாயகர் தேரில் எற்கனவே கட்டப்பட்ட இரண்டு வடங்களை மீண்டும் அவிட்டு அதனை கொண்டு வந்து சித்திரத்தேரில் கட்டி மொத்தமாக ஐந்துவடங்கள் சேர்த்து அடியார்கள் அரோகரா சத்தம் வானைப்பிழக்க சித்திரத்தேர் இழுக்கப்பட்டபோது தேர் நகர்ந்து சென்று எந்த தடங்களும் இன்றி ஆலயத்தை வலம்வந்தது.

பிரதம குரு கூறியது..

தேர் இழுப்பதற்கு முன்னமே பிரதம குரு மு.கு. சச்சிதானந்தக்குருக்கள் அவர்களுக்கு மனதில் இது முன்கூட்டியே இப்படி ஒரு சம்பவம் நடக்கும் என அறிந்திருந்தார் ஆனால் எது நடக்கும் என அவருக்கு தெரியவில்லை.

தேரோட்டம் இடம்பெற்று சுவாமி விக்கிரங்கள் வெளிவீதிக்கு வரும்போது படையாட்சிகுடி வண்ணக்கர் சி.கங்காதரன் அவர்களிடம் பிரதம குரு சிவ'ரீ மு.கு.சச்சிதானந்தக்குருக்கள கூறியுள்ளார்..

இன்று எனக்கு ஏதோ ஒன்று நடக்கும் என்ற சந்தேகம் உள்ளது நான் நினைக்கிறேன் வினாயகர் தேரில் ஏதும் தடங்கல் நடக்கவாய்பபு உள்ளதாக படுகிறது எதற்கும் அவதானமாக தேர் இழுக்க வேண்டும்

என பிரதம குரு கூறியதாக படையாட்சிகுடி வண்ணக்கர் சி.கங்காதரன் என்னிடமும் உலகிப்போடிகுடி வண்ணக்கர் ச.கோகுலகிருஷ்ணன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் நமச்சிவாயம் ஆகியோர் தேரோட்டம் முடிவுற்ற பின்னர் காரியாலத்தில் இருக்கும்போது கூறினார்.

பிரதம குருவுக்கு ஏதோ நடக்கும் என்பதை எம்பெருமான் முன்கூட்டியே ஏதோ வரு வகையில் மனதுக்குள் தெரியப்படுத்தியது இதன்மூலம் அறியலாம்.

ஆனால் வினாயகர் தேரில் அவர் கூறியபடி ஏதும் நடக்கவில்லை சித்திரத்தேரில்தான் இந்த சம்பவங்கள் இடம்பெற்றது.

அவன் அன்றி ஓரணுவும் அசையாது..

இதில் சிலர் கூறுவதுபோல் வடம் பழையது அதனால் அறுந்தது என்பதெல்லாம் மனத்திருப்திக்காக கூறப்பட்டாலும் வரலாற்றில் இதுவும் இறைவனின் ஒரு திருவிளையாடல் என்பதே உண்மை.

**-பா.அரியநேத்திரன்**
**-04/09/2023.**
**( ஆலய முன்னாள் வண்ணக்கர் , செயலாளர் )**



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 27

# மூத்த இசை வாத்தியக் கலைஞர் கலாபூசணம் கோணாமலை சண்முகராசா கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

ஒரு நாட்டின் மரபு மாட்சியினையும், பண்பாட்டு வளத்தையும் புலப்படுத்தும் கலைப்பிரிவுகளில் ஒன்றாக இசைக்கலை விளங்குகின்றது. மனிதனையும், மற்ற உயிரினங்களையும், ஏன் இறைவனையுமே இசைய வைக்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசையாகும். அத்தகைய இசையினை வெளிப்படுத்துவதில் இசைக்கருவிகள் மிக முக்கியம் இடம் வகிக்கின்றன. இசைக் கச்சேரிகளில் பாடகரின் பாடலை பொலிவு பெறச் செய்வதற்கும், நடனக் கச்சேரிகளினை மெருகூட்டுவதற்கும், கோவில் திருவிழாக் காலங்களிலும், ஏனைய கலை, கலாசார நிகழ்வுகளிலும் இசைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. இசைக்கருவிகளை வாத்தியக் கருவிகள் எனவும் அழைப்பர். அவ்வாறான இசைக் கருவிகளை நரம்புக் கருவிகள், துளைக்கருவிகள், தோற்கருவிகள், கஞ்சக்கருவிகள் என நான்கு வகையாக வகைப்படுத்தலாம். அவ் தோற்கருவிகளில் ஒன்றான மிருதங்கம் ஒரு தாள பக்க வாத்தியக் கருவியாகும். இவ் வாத்தியத்தினை 'தண்ணுமை' எனவும் கூறுவர். மிருதங்கம் தொன்மையானதோர் வரலாற்றைக் கொண்ட ஓர் இசைக்கருவியாக கருதப்படுகிறது. கர்நாடக இசை உலகில் ராஜ வாத்தியம் என்று புகழப்படுவது மிருதங்கமே.!

அவ்வகையில், வரலாற்றுப் பாரம்பரியமிக்க தம்பலகாமத்தில் பட்டிமேட்டை பிறப்பிடமாகக் கொண்டு கோணாமலை தில்லையம்மா தம்பதிகளுக்கு மகனாக 1940ஆம் ஆண்டு பிறந்தவர் கலைஞர் கோ.சண்முகராசா. இவர் தனது பாடசாலைக் கல்வியை தம்பலகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் [தற்போதைய தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில்] கல்வி கற்றவர். இவரது மனைவியின் பெயர் யசோதரா தேவி. இவரின் தந்தையார் கந்தப்பு கோணாமலை கேள்வி ஞானத்தின் மூலமாக கஞ்சிரா, மத்தளம், உடுக்கு வாத்தியக் கருவிகளை வாசிப்பதில் விற்பன்னராக திகழ்ந்தவர். அவரது மகனாகிய இக் கலைஞரும், இவ் வாத்திய இசைத் துறையில் அதீத ஆர்வம் கொண்டு தனது 17வது வயதிலிருந்தே தனது தந்தையிடமிருந்து கஞ்சிரா, உடுக்கு வாத்தியக் கருவிகளை கற்கத் தொடங்கினார். கஞ்சிரா வாத்திய இசையை ஆரம்பத்தில் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளிலும், பஜனைகளிலும் வாசிக்கத் தொடங்கினார். பின்னர் மிருதங்க வாத்தியக் கருவியை தட்சண கான சபாவில் இணைந்து முறைப்படி கற்றுத் தேர்ந்தார். திருகோணமலையில் நடைபெற்ற பல கச்சேரிகளிலும், பாடசாலை நிகழ்ச்சிகளிலும், கோவில் திருவிழாக்களிலும் குறிப்பாக பூங்காவனத் திருவிழாக்களில் மிருதங்க வாத்தியத்தை வாசித்து தான் வாழும் சமூகத்தில் தனக்கென்றதோர் அடையாளத்தை நிலை நாட்டியதோடு, மக்களினால் ஏராளமான பாராட்டுக்களையும் பெற்றார். தான் பயின்ற வாத்திய இசைக் கலையை, இக்கலை மீது ஆர்வம் கொண்டு வருபவர்களுக்கு கற்பித்து கொடுத்து வந்தார். வாத்திய இசைத் தவிர தனது தந்தையிடமிருந்து மாந்திரீகத்தையும், நாட்டு வைத்தியத்தையும் கற்றுக் கொண்டு அக்கலையிலும் வல்லமை பெற்றார். விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையும் ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருவதோடு மிகுதி நேரத்தையும் தனது கலைக்காகவே அர்ப்பணித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக 50 வருடங்களுக்கு மேலாக வாத்திய இசையில் அனுபவம் கொண்டு தனது இசை வாத்தியத் துறையின் மூலம் நம் மண்ணுக்கு பெருமை சேர்த்த மூத்த கலைஞர் கலாபூசணம் 'லய ஞான மணி' கோணாமலை சண்முகராசா கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலைப் பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.





**பரம்பரை வழியாக தொடர்ந்து வந்த உங்களது மிருதங்க வாத்திய இசைக் கலைப் பயணம் பற்றி கூறுவீர்களா?**

பரம்பரை வழியாக வந்த இசைப் ப்ரியம், எனது பாடசாலைக் காலங்களில் அதீத ஆர்வத்தை தூண்டியது. எனது தந்தை கேள்வி ஞானத்தின் மூலமே மத்தளம், கஞ்சிரா, உடுக்கு போன்ற வாத்தியக் கருவிகளை வாசித்து வந்தவர். தம்பலகாமத்தில் நடைபெறும் பாரம்பரிய கலை நிகழ்வுகளில் வாத்திய இசையை வாசித்து பலராலும் பாராட்டு பெற்று வந்தவர். அதனைப் பார்த்து வந்த நான் எனது 17ஆவது வயதிலிருந்து எனது தந்தையிடம் முதலில் கஞ்சிரா வாத்தியத்தையும் தொடர்ந்து உடுக்கு வாத்தியக் கருவியையும் வாசித்து கற்று வந்தேன். தந்தை கேள்வி ஞானம் மூலமாக பெற்றதனால் அவர் அதனை எனக்கு திகதியாக சொல்லித் தர முடியவில்லை. தந்தையின் கை அசைவுகளை கண்களால் பார்த்துக் கொண்டும், தாளத்தை காதால் நன்றாக கேட்டுக் கொண்டும் முயற்சி கொண்டு கற்று வாசிக்கத் தொடங்கினேன். ஆரம்ப காலங்களில் கூட்டுப் பிரார்த்தனைகளிலும், பஜனைகளிலும் வாசித்து வந்தேன். பின்னர் அப்பா எனக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மிருதங்கம் ஒன்றை வாங்கி வந்தார். அக்காலங்களில் எமது தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோவிலில் சமயத்தை வளர்க்கவும், அதனை மேன்மை கொள்ள செய்யவும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடைபெறும். இந்தியாவிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் ஓதுவார்களை வரவழைப்பார்கள். கதாப் பிரசங்கங்கள் நடைபெறும். அச்சந்தர்ப்பங்களில் கஞ்சிராவை வாசித்து வந்தேன். எனினும் மேடையேறுவதற்கான முழுமையான தகுதி இல்லாததால் வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. இதனை அவதானித்த தம்பலகாமத்தைச் சேர்ந்த அமரர். பண்டிதர் சரவணமுத்து ஐயா இந் நிலைமை குறித்து எனது தந்தையிடம் எடுத்துக் கூறி தட்சண கான சபாவில் மிருதங்கத்தை முறைப்படி கற்க இணைத்து விட்டார். வாத்திய இசையுடன் மட்டும் நின்றுவிடாமல் எனது தந்தையிடமிருந்து நாட்டு வைத்தியத்தையும், மாந்திரீகத்தையும் கற்று என்னால் முடிந்த கலைப் பணியை ஆற்றி வருகிறேன்.

**உங்களது குரு பற்றி கூறுவீர்களா?**

அமரர்.ராஜ ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்கள் நிறுவனராகக் கொண்டு நடாத்தி வந்த தட்சண கான சபாவில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த அமரர். ஆறுமுகம் பிள்ளை ஐயாவிடம் மூன்று வருடங்கள்[ 1967–1969] மிருதங்க வாத்திய இசையினை முறைப்படி கற்று வந்தேன். இவரிடம் கற்று வரும் காலங்களிலே யாழ்ப்பாணத்தில் இணுவில் ஜெயசுந்தரம் ஐயாவிடம் [தங்கத்தின் மகன்] சென்று மிருதங்கம் வாத்தியத்தின் திகதிகளை கற்று வந்தேன்.

**மிருதங்க வாத்திய இசையினை முறைப்படி கற்றுக்கொண்டு முதன் முதலில் மேடையேறிய சந்தர்ப்பம் குறித்து கூறுவீர்களா?**

நான் அமரர். ஆறுமுகம் பிள்ளை ஐயாவிடம் மிருதங்கத்தை முறைப்படி கற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலே தட்சண கான சபாவில் நடந்த கச்சேரி நிகழ்வில் குருவுடன் இணைந்து மேடை ஏறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது எனது வாழ்வில் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

**இதுவரையில், நீங்கள் மிருதங்க வாத்திய இசையை வாசித்த மேடை நிகழ்ச்சிகள் குறித்து?**

இதுவரையில் ஏராளமான நிகழ்ச்சிகளில் மேடையேறி வாசித்துள்ளேன். குறிப்பிட்டுக் கூறும் நிகழ்ச்சிகளாக தட்சண கான சபாவில் நடைபெறும் கச்சேரிகளில் குருவுடன் இணைந்து வாசித்து வந்துள்ளேன். சைவப்புலவர் இ. வடிவேல் ஐயா மூலமாக இசைக் கச்சேரிகளில் வாசித்து வந்துள்ளேன். இந்தியாவைச் சேர்ந்த, மட்டக்களப்பில் திருமணமாகிய ராஜூ மாஸ்டர் திருகோணமலையில் செய்த பெரிய கச்சேரியில் என்னையும் அழைத்து கச்சேரி செய்திருந்தார். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் நடாத்தப்படும் சிவராத்திரி மற்றும் ஏனைய கலை நிகழ்வுகளிலும் எமது தம்பலகாமத்து கோவில் திருவிழாக் காலங்களிலும், பாரம்பரியக் கலை நிகழ்வுகளிலும், பாடசாலை நிகழ்ச்சிகளிலும் வாசித்து வந்துள்ளேன். ரேடியோ சிலோனின் நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்த வாய்ப்பாட்டுக் கலைஞர் முழக்கம் முருகப்பா ஐயா, சிவஅன்பு ஐயா, சித்திவிநாயகம் ஐயா, வில்லுப்பாட்டு கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் மூலமாக நடைபெற்ற இசைக் கச்சேரிகளிலும், கதாப் பிரசங்கங்களிலும் வாசித்து வந்துள்ளேன். திருகோணமலையில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் கோவிலிலும், விஸ்வநாத சிவன் கோவிலிலும் வாசித்து உள்ளேன். திருகோணமலையிலுள்ள சிவயோக சமாஜத்தில் அமரர். சுவாமிஜி கெங்காதரானந்தா அவர்கள் இருக்கும் காலத்தில் அங்கு நடைபெறும் பஜனைகளில் மிருதங்க வாத்திய இசையினை வாசித்து வந்துள்ளேன். இவ்வாறாக வாய்ப்புகள் தேடி வரும் இடங்களில் அதனை நழுவ விடாமல் எனது திறமையை வெளிக்காட்டி வந்துள்ளேன்.

**மிருதங்க இசை வகுப்புக்களை நடாத்தி வந்துள்ளீர்களா?**

எனது வீட்டினைத் தேடி ஆர்வம் கொண்டு கற்க வருபவர்களுக்கு கற்பித்துக் கொடுத்து வந்தேன். எனினும் பலர் இடையில் நின்று விட்டனர். காரணம் அசமந்த போக்கு. ஒரு சிலர் கற்றனர். இன்று என்னிடம் கற்ற மாணவன் மூதூர் கட்டைப் பறிச்சான் செ.சசிதரன் மிருதங்க வாத்திய இசையினைத் தொடர்ந்து வருகிறார். மற்ற சிலர் தங்களது தொழில் நிமித்தம் கற்ற கலையை கைவிட்டு விட்டனர். தட்சண கான சபாவிலும் மூன்று வருடங்கள் கற்றுக் கொடுத்து வந்தேன். சிவபாத சுந்தரம் ஐயா கேட்டதற்கு இணங்க திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையிலும் கற்க வந்த மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்து வந்தேன். எமது தம்பலகாமத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கும் கற்றுக் கொடுத்து வந்தேன். ஆயினும் அதுவும் முழுமை அடையவில்லை. காரணம் கற்க வந்தவர்களில் பலர் தொடர்ந்து கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. ஒத்துழைப்பும் நல்கவில்லை. இன்றைய சூழ்நிலையில் வயோதிப நிலையால் கைகள் விரைப்பு காரணத்தால் கற்றுக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் இல்லாமலே போய்விட்டது என்பது கவலைக்குரிய விடயமே.

**உங்களது வாத்திய இசைக் கலையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முடிகின்றதா?**



எனக்கு மூன்று பெண் பிள்ளைகள். அவர்கள் இதனை பின்தொடர ஆர்வம் கொள்ளவில்லை. ஆயினும் எனது பேரப்பிள்ளைகளிடத்து அதிக நாட்டம் இருந்து வாசிக்கப் பழகினாலும் சில நேரங்களில் அவர்களால் முழுமையாக பயில முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. காரணம் அவர்கள் கல்வியிலே அதிகம் நாட்டம் செலுத்துகின்றனர். அதில் தவறேதுமில்லை. எந்தவொரு கலையையும் ஆண், பெண் வித்தியாசமின்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல அக் கலைத் துறையினை மானசீகமாக விரும்பி நாட்டம் கொள்ள வேண்டுமே தவிர, அதில் யாரையும் திணிக்க முடியாது. எந்த கலையாக இருந்தாலும் அதை நாம் நேசித்து நாட்டம் கொண்டு அதன் மூலமாக கற்றுத் தேரும் போதே அக் கலையில் முழுமையான ஞானத்தை பெற முடியும் என்பதே எனது அனுபவத்தின் ஊடாக நான் கண்டுகொண்ட உண்மையாகும்.

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 27

# மூத்த இசை வாத்தியக் கலைஞர் கலாபூசணம் கோணாமலை சண்முகராசா கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**நீங்கள் கற்ற கலை மூலமாக உங்களுக்கு கிடைத்த வரவேற்பு குறித்து கூற முடியுமா?**

நான் கற்ற கலை மூலமாக நான் வாழும் தம்பலகாமத்தில் எனக்கான, என் கலைக்கான ஒரு தனி அடையாளம் சமூகத்தின் மத்தியில் கிடைக்கப் பெற்றமை எனக்கு கிடைத்த முதல் அங்கீகாரமே! கடவுளுக்காக நான் செய்து வந்த கலைச் சேவை இன்று அனைவராலும் பேசப்பட்டு வருகிறது. கடவுளின் ஆசிர்வாதம் எனக்கு நிறையவே உண்டு என நம்புகின்றேன். தெய்வ சங்கற்பமும், சமூகத்தில் திறமையான கலைஞனுக்கான வரவேற்பும் பொருத்தமான களத்தில் கிடைக்கும் பட்சத்தில் அக் கலைஞன் அவனது கலைத் துறையில் சாதிக்க முடியும்.

**ஒரு வாத்திய இசைக் கலைஞனுக்கு இருக்க வேண்டிய பண்பாக நீங்கள் கருதுபவை?**

முதலில் இக்கலையை மனப்பூர்வமாக விரும்பி கற்பதற்கான பணிவு இருக்க வேண்டும். ஒரு கலையில் நாம் ஆர்வம் கொண்டு முறைப்படி கற்க விரும்பினால் அதனை எந்த சந்தர்ப்பத்திலும் கைவிடாமல் கற்றுத் தேர்வடையும்போது ஒரு முழுமையான ஞானம் உண்டாகும். அவ்வாறு கற்று முடிந்து விட்டாலும் நம்பிக்கை கொண்டு எம் திறமையை உலகறியச் செய்ய வாய்ப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் சிறிய மேடைகளிலும் கூட நமக்கான திறமையை வெளிக்காட்டும் போது மிகப் பெரிய மேடைகளுக்கான களம் எம்மை நேரடியாக வந்தடையும் என்பது உறுதி.

**திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரிய வாத்திய இசையின் தற்காலப் போக்கு எவ்வாறு உள்ளது?**

இன்றைய காலகட்டத்தில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் அற்றுப் போய்விட்டது. அதனால் பாரம்பரிய வாத்திய இசையின் ஊட்டம் மிகக் குறைந்து விட்ட நிலையை காணக்கூடியது மிகவும் வேதனைக்குரிய விடயமே! ஒரு சிலர் தங்களது பரம்பரை மூலமாக இதனைக் கொண்டு சென்றாலும் அவர்களுக்கான ஒரு களம் இன்னும் அமையாமலே போய்விட்டது. வேறு சிலர் இக்கலையை ஒரு தொழிலாக [குறிப்பாக ஆசிரியர் தொழிலாக] ஆற்றி வருகின்றமையால் அவர்களது கலை அத்திசையிலே கடத்திச் செல்லப்பட்டு வருகிறது. வெறும் கலைஞராக மட்டும் இருப்பவர்களின் நிலை இன்று மோசமான நிலைக்கே தள்ளப்பட்டு சென்று கொண்டிருக்கின்றது. மேலைத்தேய இசையின் தாக்கம் அதிகரித்துவிட்ட நிலையாலும், சமூகம் அவ் இசையை வரவேற்று நிற்பதாலும் பாரம்பரிய வாத்திய இசை நலிவடைந்து சென்று கொண்டிருக்கின்றதை இன்று உணர முடிகிறது. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு பாரம்பரிய இசையை மட்டுமல்ல அனைத்து பாரம்பரிய கலை அம்சங்களையும் அதன் தன்மை மாறாமல் பாதுகாக்க முயற்சி எடுக்க வேண்டும். அதற்கு ஊடகங்கள் கைகொடுக்க வேண்டும்.

**இசைத் துறையில் நீங்கள் பெற்ற விருதுகள், பட்டங்கள் குறித்து?**

1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தின் போது தர்ம கர்த்தா சபையால் 'லய ஞான மணி' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை. 2004இல் சூப்பர் சங்கீத் இசைக்கழகத்தால் இசைத் துறையினை [மிருதங்கம்] பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டமை. 2006இல் இசைத்துறையில் [மிருதங்கம்] கலாபூசணம் விருது கிடைத்தமை. 2008 இல் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் தர்மகர்த்தா சபையால் 'மிருதங்க இசையின் விற்பன்னர்' எனப் பாராட்டி கௌரவித்தமை. 2018இல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் கௌரவிப்பு செய்தமை.

**நிறைவாக வளர்ந்து வரும் இசைக்கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

இசை என்பது ஒரு நீண்ட பாரம்பரியத்தையும், வரலாற்றையும் கொண்டே காணப்படுகிறது. அதனை நாம் முறையாகக் கற்று அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டியது வளர்ந்து வரும் இசைக்கலைஞராகிய உங்களது தலையாய பொறுப்பாகும். இசையை நன்றாக உணர்ந்து கற்றுக் கொள்ளுங்கள். சிறந்த இசைகளை நன்றாகக் கேளுங்கள். அதன் மூலம் நமது உடலும், உள்ளமும் புத்துணர்ச்சி அடைகிறது. நினைவாற்றல் மேம்படுகிறது. தன்னம்பிக்கை அதிகரிக்கின்றது. மன அழுத்தத்திலிருந்து விடுபட முடிகின்றது. இவ்வாறான சிறப்பை கொண்ட இசைகளை நீங்கள் தொடர்ந்து கற்றுக் கொண்டு வரும் வேளையில், உங்களுக்கான அடையாளத்தையும் பெற்று இசை வல்லுனராக திகழ முடியும்.

அந்த வகையில், எம் போன்ற மூத்த கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

இன்றைய சூழ்நிலையில் பாரம்பரிய இசைக்கருவிகள் வழக்கிலிருந்து மறைந்து கொண்டே வருகின்றன. மக்களிடம் பாரம்பரிய இசைக்கருவிகள் மீதான ஆர்வம் அருகிக்கொண்டே வருவதை அவதானிக்க முடிகின்றது.அத்துடன் பாரம்பரிய வாத்திய இசையின் மூத்த கலைஞர்களைத் தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கு வாத்திய இசைக்கலை நகர்த்தி செல்லப்படுவது மிகக் குறைவாகவே உள்ளது. இவ் பாரம்பரிய வாத்திய இசையின் புனிதத்தையும், அதன் மேன்மையையும் இனிவருங் காலத்து தலைமுறைக்கு தெரியப்படுத்தவும் அது சார்ந்த மூத்த கலைஞர்களுக்கான பதிவையும் ஆவணப்படுத்த வேண்டியது உரிய திணைக்களத்து பொறுப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், இளம் கலைஞர்களின் மிகவும் அவசியமான பொறுப்பாகும். என்பதை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறாக வாத்திய இசை மூலமாக திருகோணமலை மாவட்டத்திற்கு அழியாப் புகழினைப் பெற்றுத் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிராத்தித்து கொண்டு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

**நன்றி!**



**தொடரும்.......**

**கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு திருமலை தட்சாயினி ஞானசங்கரன்.**

---

# தேரோட்டம் அப்படி அங்கு என்னதான் நடந்தது?

நேற்று முன்தினம் தேரோட்டம் பல தடங்கல்களைத் தாண்டி நடந்தேறியதனை அனைவரும் அறிவர்.

இதற்கான காரணம் என்ன? ஏன் அவ்வாறு நடைபெற்றது?

ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமான நியாயித்தல்களை கூறுகின்றனர். இது பற்றி இங்கு பேசப்போவதில்லை.

முதலில் 'பிள்ளையார் தேர்' இழுப்பதற்குத் தயாரானது. இதிலே ஆலய குரு சிவஸ்ரீ வ.சோதிலிங்கக் குருக்கள் ஐயா தலைமையில் தொண்டர்களும் இருந்தனர். பிள்ளையார் தேர் எவ்வித பிரச்சினையுமின்றி வலம் வந்துகொண்டிருந்தது.

சிவன் உமை சமேதரர் அமர்ந்திருந்தது 'சித்திரத் தேர்'. அதிலே பிரதம குரு சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் ஐயா தலைமையிலான குருமாரும் தொண்டர்களும் தமது பணிகளைச் செய்துகொண்டிருந்தனர். அது வடம் (கயிறு) பூட்டப்பட்டு இழுக்கத் தயாராகி முதலாவது எத்தனிப்பில் அறுந்துவிட்டது. மீளவும் வடம் பூட்டப்பட்டு இழுக்க மற்றைய வடமும் அறுந்துவிட்டது. இவ்வாறு 4ஆவதாக, 5ஆவதாக இழுப்பதுவும் அறுவதுமாய் தொடர்ந்தது.

பலருடைய கண்களில் ஒரு வகையான கலக்கமும் பயமும் தென்பட்டது.

வழமையாக தேர் ஓடுவதற்கு முன்பே பிரதம குருவினால் பூசணிக்காய் வெட்டப்பட்டு வண்ணக்குமாரினால் தேர்ச் சில்லில் தேங்காய் உடைக்கப்பட்டு தேர் இழுப்பது மரபு.

ஆனால் நேற்று வழமையோடு மீளவும் பூசணிக்காய் வெட்டப்பட்டதுடன் தேர்ச் சில்லுகளுக்கிடையேயும் பூசணிக்காய் வைக்கப்பட்டிருந்தது.

சுமார் 3-4 அடி ஆழப் புதைந்த அந்தச் சக்கரங்கள் ஒரேயொரு எத்தனிப்பினிலே மிக இலகுவாக மேலெழும்புவது வழமை.

ஆனால் இத்தனை செயற்பாடுகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதும் எவ்வித அசைவுமின்றி தேர் ஸ்தலத்திலேயே காணப்பட்டது.

குருமார்களின் கண்களிலே ஒருவித கலக்கமும் வண்ணக்குமாரின் மனங்களிலே ஒரு சஞ்சலமும் தென்பட்டது. இது ஒரு அபசகுனத்திற்கான (ஏதோ நடந்துவிடும் என்ற) சமிக்ஞையாக பார்க்கப்படுவதுடன் சமூகத்தின் கண், மூக்கு, காது வைக்கும் கருத்துக்களை என்ன சொல்வது.

இவ்வாறான நிலையில் தேரிலிருந்த பிரதம குரு இறங்கி மூலமூர்த்தியிடம் செல்கின்றார். அவருடைய வேண்டுதல்களைச் செய்து, மன்றாடி அங்கிருந்து தேங்காய் கொண்டுவரப்பட்டு தேரைச் சுற்றிவந்து உடைக்கப்படுகின்றது.



வளமையாக மூன்று வடங்கள் மட்டுமே பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் நேற்று பிள்ளையார் தேரிலிருந்த இரண்டு வடமும் கொண்டுவரப்பட்டு எல்லாமாக ஐந்து வடங்களும் பொருத்தப்பட்டது.

குருமார்களின் வேத உச்சாடனங்களுடன் அடியார்களின் ''அரோகரா'' என்ற கோசம் வானைப் பிளக்க எங்கும் இறை பாடல்களும் எல்லோர் மனங்களிலும் அவன் எண்ணங்களும் எல்லோர் வாயினிலும் 'ஓம் நமசிவாய' என்ற மந்திர உச்சாடனமும் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

தேரோட்டம் எவ்வளவு அற்புதமானது, கைங்கரியமானது. ஆனாலும் அனைவரும் அவ்வாறு செயற்படுகின்றார்களா? என கேட்கத் தோன்றுகின்றது. இறைவனே உயர்ந்தவன். அதனாலேயே பீடம் அமைத்து மேலே அவனிருக்க கீழே நாமிருந்து வணங்குகின்றோம்.

இறைவனுக்கு மேலாக (மடங்களின்மேலும் மரங்களின் மேலும்) நாமிருந்து எந்த வழிபாட்டையும் மேற்கொள்ள முடியாது.

மேலங்கியின்றி வேட்டி அணிந்து ஆடவர்கள் மட்டுமே தேரை இழுப்பது இவ்வாலயத்தின் மரபு.

தேரோட்டம் என்பது பார்ப்பதற்கு மட்டுமன்றி மனதார வணங்கவும் வேண்டியது.

இறைவனை சுமப்பதுதானே தேர். அதனை ஒழுங்குபடுத்துவதிலும் அதே போன்று இழுப்பதிலும் சில நியதிகள் தேவை அல்லவா?

பஞ்ச மகா பாதகங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. குறிப்பாக ஆலயங்களில் திருட்டுக்கள் ஏற்க முடியாதவை. இதனோடு செய்யும் எந்த வேண்டுதலையும் இறைவன் ஏற்கமாட்டார்.

இதுபோன்று இன்னும் பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால் நேற்றைய அந்த இழுபறி நிலையின்போதே அனைவர் வாயிலும் இறை நாமமின்றி வேறெதனையும் காணோம். அவர் பாடல்களின்றி வேறேதும் இருக்கவில்லை.

கோபுர வாயிலிலிருந்து விம்மி விம்மி அழத் தொடங்கிய வணக்கத்திற்குரிய ஆலய பிரதம குரு வட கிழக்கு மூலை வரை அழுதுகொண்டேயிருந்தார். இறைவனை குரு வடிவில் காண்பவர்கள் அல்லவா நாம். இதுவும் இறை சஞ்சலமாக எண்ணியதில் தவறில்லை.

பலர் பலத்த குரலில் அழுதுகொண்டே அவரை வணங்கிகொண்டு வந்தனர். இறைவன்மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியவாறு பலர் திருமுறைப் பாடல்களையும் தெய்வீக பதிகங்களையும் பாடிக்கொண்டே வலம்வந்தனர்.

இந்த மாற்றம் எதனால் நிகழ்ந்தது?

சலனமில்லாத இறை வழிபாட்டிற்காக அனைவரும் செயற்படவேண்டும். ஒத்துழைக்க வேண்டும். வேண்டப்படாதவை தவிர்க்கப்படல் வேண்டும்.

'அவனின்றி ஓரணுவும் அசையாது
அவன் ஆணையின்றி வேறெதுவும் நடவாது...'

**Dimalesh kanna** முகப்புத்தகத்திலிருந்த